உ

முருகன் துணை.

# ஜோதிஷ பாவ
# * பலப் பிரகாசினி. *

இது

திருநெல்வேலி டவுண்

ஜோதிஷ சாஸ்திரப் பிரசாரகரான

இந்து ஜோதிஷ வித்வான்


**பிரம்மஸ்ரீ**

**பி. எல். சுந்தர சாஸ்திரிகள்**

அவர்களால்


கோர்வை செய்யப்பட்டு


திருநெல்வேலி டவுண்

ஸ்ரீ தாராம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.



ரிஜிஸ்தர் காபி ரைட்



1926.

# ஜோதிஷ பாவபலப்பிரகாசினி

## ஆயுர்பாவம்.

### பொது விதிகள்.

எந்தத்தானத்தின் பலனது சொல்லுங் காலிபம் புகலுதயமாய் வைத்தே—பந்தித் தனிராசி பனிரண்டையுந்தான் பாந்தமாயடைவிலே பார்த்து—சிந்தித்த முறையாய்ப் பலன்களைத் தெரிந்து செப்புவர் குருகடாக்ஷத்தால்—அந்திக்கு முன்னங் குடக்கெழுபிறைபோ லழகிய திருநுத லணங்கே. (1)

யாதுகாரகனு மப்பதிக்கிறையு மிருந்திடின்மோனை நாயகன்றான்—மீதுநட்பாட்சி யுச்சகற்கோணே மேவிடி லன்னவர்க்குத்—தாஜேதிய பலன்கள் மிகவுமுண்டாகு முற்பகைநீசமா றெட்டைத்—தீதுறு வியத்தைச்சேர்ந்தது மிக்கச் செப்பிய பலனுந் தீதென்பர். (2)

எண்ணியபடியே காரகக்கோட்க ளியல்புறு தானத்தைச் சேரி—னண்ணிய பலன்களி யாவையு நல்கு நலனுறுஞ் சுக்கிரன்றனே—பெண்ணுடைத் தானங்கோள் மகத்தானம் பெற்றிடிலுதயா மனையா—டன்னையாய் காசமென் றனர்கணிதத் தியற்கையா யாவையுமறிந்தே. (3)

தூயகோ ணின்றகோணை நாதனுக்கே தொருத்திடு பலனார்த்துப்காருந் தீக்கோளின் றவிராசி யாதியர்க்குச் செப்பிய பலனுந் தீராகு—மாயமே மூன்றுக் கதிபருமவனை மவிவுடனடைந்திடின் கோளுங்—காயமே குறைக்கு மெட்டினோன்றுனே காலன் கைப்படுத்துவன் கண்டாய். (4)

மாணத்தானத்தோ னிருக்கின்ற ராசி மாதந்தி லந்த நா
டன்னில்—விரணத்தான் பகையு நோயுமனைவரால் வெறு
பொடு அழிவு முண்டாக்கு—மாணத்தால வீடு மடிமையும்
பொன்னு மழிந்திடுந் துயரினிற் சாவார்—தருணத்தாற் றேறு
மயிலெனச்சாயற் றனித்திரு வனையசெந்தேனே. (5)

தானத்தா லாய்ந்து சொல்லவேண்டுந் தறகாலப் பலனை
யெல்லா—ஞானத்தா லறிந்தேவரும் பலனெல்லா நவிலுவ தறி
வினிற் பார்த்தே—மானத்தார்க் குருவே நின்றதோர் தானம்
வர்த்தனையாகவே மல்கும்—பானத்தாஞ் சனியனுறை யின்ற
தானப் பலன்கெடும் பீடையுங்காணும். (6)

சாத்துடனே சாந்திர்க்கம் திரந்தான் மத்திபமாஞ் சாற்
றுஞ் சரமுபய மேனிற்று னற்பமாகும்—திரத்துடனே திரமற்
பந் திரஞ்சரமத்திபமாந் திரத்தி னுபயந்திர்க்கம் செழுங்கயர்
கண்மயிலே—வரத்தி னுபயத்துடனே யுபயமற்பமாகும் வரு
முபயஞ் சரமெனில் மத்திபமாகு மென்பர் ஸ்திரத்துபயத்
துடன் திர்க்க வயதாகுமோ ரசாரந்தன்னிலே யுரைத்த
திவ்வையாம். (7)

விதியற்றுப் போனபேர்க்கு மதியத்தைப் பார்த்துச் சொல்லு
மதியற்றுப் போனபேர்க்கு சனியதைப் பார்த்துச் சொல்லு
சனியற்றுப் போனகாலே யுதயத்தைப் பார்த்துச் சொல்லு
சனிமதி யுதையந்தப்பா தப்பாது மரணகாலம்.

ஒரு குளிகன் மேவும் ராசி தனக்கோதை (8)
திருதிரி கோணத்திற் சனியன் வருங்காலம்
வல்ல யதனிற் பிறந்தபேர்கள் மடிந்திடுவர்
தொல்லை யுலகோர் தமக்குச் சொல்,
(9)
பன்னுமட்ட மாதிபரி ருந்த ராசிக்கு
மன்னுதிரி கோண மாதமாந் தன்னுமந்த
மாதத்திலே மரணம் மாந்தருடை வயதைச்
சோதித்துச் சொல்வாய் துணிந்து. (10)

இரவியிருக்கும் ராசிக்கு நேச
மருவுந் திருகோண மன்னி வருகின்ற
நக்ஷத்திரத்தில் மரணமந்த நாதனுக்குச்
சொட் சேத்திர மறிந்து சொல்.
(11)

பெருகும் அட்டமத்தோன் கேந்திரம் பிலக்கவே உயிரோன்
வருபெல யீனமாக மறைந்திடில் வடிவேற் கண்ணாய்
ஒரு பன்னிரண்டு பன்னே ழோரிரு பத்திரண்டா
மிருபத்தைந்தல்லால் முப்பத்திரண்டினில மரணமாமே.
(12)

ஆமட்ட மத்திநாதி பனுமட்ட மத்தில்லமர்ந்திருக்கச்
சோமன் பாவருடன் கூடி யிரண்டாமெட்டில் சூழ்ந்திருக்க
தாமும்வய தைம்பத்தெட்டாய் தருமஞானித் தானுவன்
காமன் கணையைப்பழித்த யிலைகடிந்து மருட்டும் கண்ணாளே.
(13)

தப்பாவில்லை லக்கினமா தன்னிற் குருவும் தானிருக்க
இப்பார் குசனிந்தோடு கரும்பாம்பிவர் மூவோருந்தான்கூட
மெய்ப்பா னெழுபத்தைந்தாகும் மேவும் பாவர் கேந்திரத்தில்
ஒப்பர் சென்மத்தாதி எட்டிலாறி லாண்டிருபத்தெட்டாமே.
(14)

ஆகும் லக்கின மெட்டாதி கூடியே
வாகு கேந்திரத் தெய்தமற் றெட்டினில்
தாகமோ ரெவராயினுந் தானுறில்
ஏகுவன் பன்னிரண்டினிற் கண்டமே.
(15)

கண்டவே ழெட்டாறிடத்திற் கதிர்த நல்லோர் தாமிருக்க
ஆண்டுமூன்றிற் பன்னொன்றில் சுபருறத் தீர்க்கையுண்டாம்
கொண்டவெட்டாதி பனுசசமகொளச் சென்மாதிப் பன்றனும்
மிண்டி யினியோர்காணக் கேந்திரத்திலிருக்க வெகு வயதே.
(16)

மானிடருக் கயன்விதித்த ஆண்டினை மூன்றுக்கில் வருமுப்
பானை மூன்றுக்கு பிருதம்பமென்ப—தானறு பத்தாகு மத்திபந்
திக்கு மீதனமேல் தாழ்வாமுன் வகுத்திடு பங்கொன்றினை மூன்
றுக்கில—பரன்மொழியாய் பன்னொன்றும் பங்கொன்று தனக்கே

பகர்ந்திடு வயற்பத்தில் அற்பமத்தியந் தீர்க்கம்—ஆனமத்தியந் தீர்க்கத்தை யிவ்வாறே பிரித்து அறிந்திடுநீ பவரவர்கள் ஆயுளினைக்கொண்டே. (18)

வாக்குத் தானத்திலேனும் வாக்கேசன் றன்னோடேனும்
மாக்கும் வெஞ்சனியன் கூடவட்ட மாதிபனே பார்க்கில்
நேர்க்கும் நாற்பாதை மீதே சினத்த நாய்கடியால் கண்டம்
வீக்குருஞ் சாத்தைவென்று வேறு செய்த கதிறனே. (19)

அட்டமாதிபனும் குசனுமே கூடியாறு பன்னிரண்டிடத் திருக்கில்—துட்டரா யுதத்தால் மரணம் மற்றினியோர் சூழ்த்து கண்டிடப்படுகாயம்—எட்டிறைவி பன்பாம்புடன் வியமா றெட்டினில் கள்ளலா வரிட்டம்—தொட்டலக்கின மெட்டாதி சேர்ந்துதாஞ் சூழ்மனையு ரிற்செல கண்டம். (20)

## சகோதர பாவகம்.

போற்றிய மூன்றுளோனும் பூமனும் கூடியெட்டிற்
றேற்றிடத் துணைவர்நாசம் சொல்லுமிவர் தன்னைப்பாவர்
சாற்றிடக் கூடிநின்றால் சகோதர ருண்டாம்நாசம்
நூற்றுருங் கவிரைபாவர் நோக்கிடிற் சேட்டர்நாசம். (1)

கூடித்திடுஞ் சனிசேய் மூன்றிற் கலந்திட பாவர் பார்க்கில்
அடுத்திடும் துணைவரெல்லாம் ரிட்டமென் றுரைவர் மேலோர்
வெடித்திடு காரகன் மூன்றோனைக் கிறைபெலவீனமாகி
அடுத்திடு மாறுபோனு லுற்பத்தி யாகிநாசம். (2)

ஊன்றிய மூன்றானுக்குடையவர் தன்னைச் செவ்வாய்
அன்றி மற்றோர்கள் கூடி லவர்நோக்கிற் றுணைவர் நாசம்
தோன்றிய கேட்டைநாளிற் றோகையே பிறக்கிற் சேட்டர்
மன்றினின்மேல் நாசமாகும் வடிவக லல்குலாளே. (3)

ஆறுமிடத்தி லரிய கருங்கோன்
வீறுயிருக்க மேவுவன்றிசை

பேறாய் வரினும் பெலமுள சகோதரம்
தீறுயுயிர் விடுமெமியோ ரறிய.
(4)

தெளிந்து சொன்மூன் றேழொன்பான் சிறந்த—பன்னொன்றிற்
செல்வர் வளர்ந்து சின்னான்கு கோணம காரத்திசையிலாதல்—
வழங்கிய கோணை நோக்கி வருவதை யாண்பெண்ணென்று—
முளங்கொளுஞ் சகோதரங்க ளுண்மையா யுரைக்கலாமே.
(5)

இரண்டினிர் கடுத்த மூன்றிலிருப்பது நற்கோளாகிற
திரண்டெழுஞ் சகோதரங்கடர் காயுமென்று செப்பு
வான்றிய மூன்றிற்பாவர் வந்திட வலியதீக்கோள்
பிரண்டெழு நோக்குமாகிற் பெண்சகோதரங்கள் பொன்னே.
(6)

செப்புங்காலி லக்கினத்தோன் றெளிந்துமூன் றுடையோன்கூடித்
தப்பிலா துறவுமானுற் சகோதரர்க் கினியனுவ
னப்படிக்கூடி மூன்றி லிலக்கினந் தன்னிலேகி
லொப்பிலாப் பகைஞராகி லுயர்தரு விரோதனுமே.
(7)

விளங்கிய மறையோன்வெள்ளி மிக்கமூன்றதனை நோக்கின்
முழங்கிய சகோதரத்தை முழுதும் ரக்ஷிப்பா னல்லால்
வழங்கிய கதிருமாலு மைந்தனமூன் றதனைநோக்க
வுனக்கொளுஞ் சகோதரங் களுசமென் றுரைக்கலாமே.
(8)

இச்சையாய் மூன்றோடே யிரணியன் பிருகுகூடப்
பச்சைமா னோக்கிப்பார்க்க வல்லது பதியிற்கூடிற்
கச்சணி முலையாய்கேளாய் காசினி தனிலேமிக்காம்
நிச்சய மன்னதான நிலவா மாய்ச்செய்வானே.
(9)

## மாதுரு பாவகம்.

சுக்கிரன் பலவானாக வல்லது தோன்றத் திங்கள்
மிக்கதாய்ப் பலவானாக மிகுசுப ருடனே பார்க்கத்
தக்கவர் சுபர்கள்ராசி சார்ந்திட நாலின்கோளன்
சிக்கெனப் பலமாய்நிற்கில் தீர்க்காயுள் தாய்க்குண்டாமே. 1

சொன்னநா லுடையகோளன் சோர்விலா வெட்டாறில்
வன்பல வீனமாகி வருந்துலக் கினத்தைப்பாபர்
துன்பொடு பாவர்பார்க்கத் தோன்றிய சாதகர்க்கு
வன்பிடுந் தாயார் நாசமாமென உரைக்கலாமே. 2

சந்திர னமாபக்ஷஞ் சார்ந்திட வெட்டாறில்
வந்திட வாறில்பாவர் தானுமே மதியோடேக
விந்தையாய் நாலிற்பாவர் மேவிடச் சாதகர்க்குச்
சிந்தையா யிரங்குதாயார் செத்துப்போ மென்றுசெப்பே. 3

சொல்லிய நாலில் மந்தன தோன்றிடப் பாவர்பார்க்கச்
சொல்லிய அட்டமாதி யதிபனுங் கொடூரமாக
வல்லநீ சங்களாக வந்திடப் பெற்றதாயார்
ஒல்லையில் செத்துப்போவா ளென்னவே யுரைக்கலாமே. 4

மூன்றினி லஞ்சிற்பாவர் மொய்த்திட நாலின்கோளன்
தோன்றிட பகைநீசம்ப விராசியிற் சேர்ந்துநிற்க
மான்றிகழ் மதியிற்பாவர் வந்திட மாதாரோகம்
மூன்றிடு மென்றுமுன்னோ ருரைத்திடு சரிதைதானே. 5

சந்திர னுவிணைகன் சார்திசை யபகாரத்தில்
விந்தையாம் நாலில்வந்தோன் மிகுந்திடப் பார்த்தோனுன்னும்
தந்திசை யபகாரத்திற் றாயார்க்கு மரணமாக
வந்திடு மென்றுசொன்னார் வருட்வகை கலாபேரே. 6

அத்தங்கதமாம் பாலுருத் தானுதி வியத்தி லுற நான்கில்
மெய்த்துங் கலைவென் மதியிருக்க வதற கெழ்காரி மேயுதினும்
புத்திசெறி சுககிரற்கேழிற் பூமிசுதனும் பொருந்தி நிற்கில்
சித்தமன்னை தனக்கரிட்டஞ் சேருநற்கோள் செறியினன்றும். 7

செறியு மிரவியுடன் காரிசேர்ந்து கும்பந்தனி லிருந்தே
அறியுமூன்று மதியனையு மன்னைபதி நான்காமிடமும்
பிரியமறவே சனிபார்க்கப் பிலமற்றிடத்தோ டவிருக்க
மறுதிக்கோணன் காதியுச்சமானாலும் போமாதாவே. 8

நல்கார் சனி செவ்வாயிரண்டு நான்காமிடந் தன்னைப்பார்க்கில்
ஒல்கா திருக்கிற் காரகனு மொசிவாய் விசைய முற்றிடவே
செல்வரளனை தனக்குறுநோய் சினத்தேயாவஞ்சேர்ந்தற்றால்
இல்லாளன்னை பொன்றேக்கினிற்பள் சிலநாணீணிலத்தே. 9

செப்பிய லக்னாதன் செல்லாவா செட்டமாறி
தற்பில வாறுபச்செவ்வாய் கலமிலாக் கோணகண்ணா
பொற்புறு மதிபோயர்தக் கொடோடு பொருந்துமாகில்
இப்படிப் பிறந்தசெய்க்கிங் கிரண்டுதா யுண்டென்பாரே. 10

நாசமில் லாதவாக னுதிபனிருந்த ராசிக்
கேசனுண் டாகநாலா மிராசிக்கோன சத்ருவாகி
னேசமில்லாத தான்போன கெடுந்திசை யபகாரத்திற்
பூசலுண்டாகிவிடும் பூமியு நாசம்பூவாய். 11

பூமிக்குண் மிக்க நாள்கோள் புரிதிசை யபகாரத்தி
னேமித்த செந்துசாவார் நீலன்செய் குளிகன்கூடிற்
சேமித்த நாள்கோ ளோடே சேர்ந்திடத் தீமையெல்லாம்
மாமிக்க வளர்த்தமெல்லா மவனுக்கே யேதுவாயா. 12

சேர்கிறை லாக்கின்கோனுஞ் சிறந்தபன்னி ரண்டின்கோனும்
கூர்கின்ற நாலின்கோனுங் கொடிய பாபர்களோச் சேர்ந்து
கோர்கின்ற தலமாறெட்டு நிறைந்தபன் னிரண்டிருக்க
மார்கொண்ட முலையனுனே மனைகள்போய் நாசமாமே. 13

மனையெனு நான்கினீச வத்தமனங்களாக
வினையெனுங் கிரகஞ்சார விருவது வொற்றிலெங்க
முனையெனு நான்கிற்பாபர் மொய்த்திட பாபியாகு
மினையெதிர்ச் சனிபோய் நிற்கி லிவன்சுக மில்லான்றே 14

இல்லெனு நான்கின்கோட்போ யிசைந்தபன் னிரண்டிலேறச்
சொல்லுவ ரன்னியதேசஞ் சுக்கிர தன்னியங்ட் பேறு
மல்லது நான்கின்கோட்போ யாறெட்டி லமையுமாகிற்
சொல்லுவா ரைன்றுபாதி தேடியமனைபிற் றனே. 15

தேடிய பன்னிரண்டோன் சிறந்தவாக் குடையோனுங் கோன்
கூடிய மூன்றுறெட்டிற் கொடியபனி ரெண்டுங்கூடி
யோடிய திசையிலேறு முறுவல காரத்தேது
மேடையா னிவனிருந்த வீட்டைவிட் டேகுவானே. 16

ஆனமதி யந்தனக்கேழிற் செவ்வா யுறிலன்னைக் கரிட்டம்
காணிய மாதுருதானங் கடகமாகப் பிறைநிற்கில்
பூணும் வயது பூரணமாம் பொல்லா ரிரண்டுபுரமிருக்க
வூணுமதியநடுவிருக்க வன்னைக்கரிட்ட மிசைந்திடுமே. 17

கண்டவன்னை பிதாத்தான கடவுளிசைந் தெங்கேயுறினும்
மண்டுமிரவி மதிகூடி மாதா தந்தைத்தானத்தில்
அண்டியிருக்கிற் பிதாவுடனே யன்னைக்கெய்து மனுமரணம்
பண்டுநான்கொன்பதுக்கிறைவர்பலத்தாற்பாலன்பிரிவுசொல்வாம் 18

பொருந்துசித்திரை பூராடம் பூசத்தி லிரண்டாங்காலில்
இருந்திய மதியுஞ்சுங்கன் ஜென்மத்துக் கேழாய்நிற்கில்
வருந்திய மாதுர்க்கண்ட மதியைச்சேய் சனியும்பார்க்க
வருஞ்சுபர் நோக்காராகில் அன்னைக்கே கண்டமாமே. 19

பவிப்புறு மொன்றே ழெட்டிற் பாவர்களிருப்பாராகில்
சவிப்பொடு மகவிருக்க சாற்றிய மாதுர்கண்டம்
கவிக்குமவெண் மதிக்கைந்தொன்பான் கரியவனிருக்கமாமன்
சவிப்புரப் பொன்னுமல்லால் தாயார்க்குக் கண்டமாமே. 20

உத்திர மகத்திரேட்டை யுரைக்கும் ரேவதிநாற்காலில்
புத்திரர் பிறக்கின்ற பூங்கொடி மரணமாகும்
உத்திர மகமுதற்கால் குழவிதான் பிறக்கின்ற
பத்தினிக் கரிட்டமாகும் பையர வல்குலாளே. 21

போற்று முத்திரம் பூராடம் பூச மாயில்யம் சித்திரை
யேற்றிடு முதற்காலான விராசி லக்கினமேயாக
சேர்த்திடு மிந்த நக்ஷத்திரத்தினிற் குழவிதோன்றி
பாற்றிடு மாதுர்க்கண்டமாமென வுரைக்கலாமே. 22

மங்கல நாயினிற்கு மதிராவி பன்னிரெண்டாகில்
பங்கமி லீன்றதாயும் பாலனு மரணமாகும்
மிங்கனங் கிரகணவேளை யிலக்கனந் தன்னிற்றோன்ற
திங்களும் பானுநிற்கில் சிறுவனுந் தாயுஞ் சாவார். 23

## யோக பாவகம்.

பொன்னவன்றன் வீடாக புந்திசெய் மந்தனோடுங்
கன்னியிற் சேர்வானாகிற் களத்திர யோகனாவான்
அன்னவ னாலேசெல்வ மதிகமா யார்க்குமீவன்
மன்னனென் றுரைக்கலாகு மனுநெறி தவறன்மாதே. 1

புகருமே புகர்வீடாகப் புந்தியு மதினிற்சேர
தகருட னிரண்டே ழேனுஞ் சற்குரு புகரேயானால்
நகர்பதி பூமிபாக்யம் நரபதி யாலேயுண்டாம்
பகரலா மிந்தயோகம் பத்தஞ்சு வயதின்மேலாய். 2

ஏழினுக் குடையோனோடு இணங்கிய பாவர்சேர்ந்தால்
வாழ்வுடன் மனைவியாலே வரும்பல னற்பமாகும்
தாழ்வுட னிருப்பானாகும் தாரமும் பங்கமாகும்
ஏழினோன் றனிப்பானாகில் யிருதி யவளானுண்டாம். 3

களத்திர தானத்தோனுங் கருமத்தா னத்தினோடு
வளக்குடன் லாபந்தன்னில் வந்திட மாந்திபானு [தால்
முளைத்திட வதற்குநாதன் மூந்திடமூன் றென்பான தனிற்சேர்ந்
களத்திரத்தாலே செல்வங் கருதலாங் கணிதநூலால். 4

சூரியன் சுங்கன்மாலும் துணிவுடன் களத்திரஞ்சேர்
காரியுமுச்சமாக கலைநிறை தன்வீடானால்
பாரியால் யோகவானும் பாக்கிய மதிகமாகும்
பாரினி லிதியன்மேலோர் வகுத்தனர் பலனைத்தானே. 5

சிங்கலக்கினமே தோன்ற தினகரன் செவ்வாய்புந்தி
சங்கையாய் குருவுங்கேதுஞ் சதிருடன் சேய்வீடாக

பங்கமின்றசமல் மந்தன் பதிதனி லிருப்பதானால்
மங்கையபாற் றனவானுவன் மதித்தனர் கணிதநூலோர். 6

நாலாமுதயத்தி நாலொன்பதுடையோர் நோக்கமுடன் கூடி
நிற்க—மூன்றுடையோ னுச்சமேலாகி லோராண்டுமேன்மூன்று
வருடமிருந்த சுகமடைவ னுதயத்தி னுச்சக்கோளாக—பாலக
வுரையச் செப்பாற்க ஒன்பதுக்குடையோர் பகர்மூன்றிலேயிருக்
கிற் பன்னிரண்டாண்டின்மேற்—சேலாக மூன்றாண்டு சுகமடை
வன் கண்டாய் இலதநூதற்கயைமுலே சேயரிக்கண்மயிலே. 7

அரிவுதயங் கேந்திரமாய் வெள்ளிநிற்க வுதயத்தி லத்தனுங்
மேவிடச் சாமியதி கபிலமாயுற்—றெரியவரும் வயதுபதினொ
தின்மாலே தேகமுள்ள நாளாவும் சிறந்த சுகமுடையான் புரியு
மிலக்கினஞ் சுபமா யுச்சநிற்கப்—பொன்னேனுன் புளனுங் கேந்
திரமாகச் சாமிகேந்திரத்தில்—பரிவில்ல பாராவதாங்கசமதுரின்
வயதே பதினொன்றின் மேலாயுளுள்ளமட்டுமே சுகமே. 8

சகவுதய மவர்கொத்த மாங்கிஷுமேயோ சுவாமியொன்பாநிற்க
மதிக்கொண்பதிற் பொன்னுமிற்—நிகர்வருடம் பதினறு மேல்
மூன்றுவருடம் நிறைந்தசுகமுதயத்திற் கைந்தோறும் புகரும்—
அகலமிழந்து கூடிநிற்கிலாபேச னட்டிலாசிபுசசங் கேந்திரங்
கோணங் கடனிலிருக்க—ஜகமதனி லிருபதாபவருடம் தின
மேலே எட்டுவருடஞ் சுகமுண்டேந்து தகமயிலே. 9

ஐய்ந்தனிலக்கினஞ்சரமாய் நிசியுதிக்க பத்தோனிந்துவுடனே கூடி
யேழிலுச்சமாகி—வாய்ந்தவய திருபத்தைந் தானதற்குமேலே
ஐந்துவருடஞ் சுகமுண்டாகு—முதயத்தில்பாய்ந்த கர்மாதிப
னிருக்கச் சாமியென்பதாகப் பத்தினிலிராகுநிற்கிற் பண்புடைய
புவிமேற்—றேய்ந்திருபத் தொன்றின்மேலாயுள்மட்டும் சுகத்
தை யனுபவிப்பன் எனச்சொற்றனர் கற்றுணர்ந்தோரே 10

உணருமுதயந்தனி லிரண்டோனுறையச் சாமிதான்காக
கணக்கிலுபத்தோன் பாக்கியத்தின் கலக்கினிருபத்தைந்தின்மேல்

துணைவிலைந்து வருடந்தான் சதிராய் சுகத்தை யனுபவிப்பன்
குணரஞ்சித யங்கயமயிலே குயிலே யமிர்தகுஞ்சரமே. 11

சரந்தானுதைய மாக வைந்திற்சாற்று மேழிற்பன்னொன்றில்
விரங்கூரிரவிமதி சனியுமிருக்க வெட்டிற்குருவெள்ளி
நிறந்தாணுகப் புதன்கடக நிற்கவிருபத் தேழின்மேல்
வரந்தான்வருடம் பதினாறுமன்னுஞ் சுகத்தையனுபவிப்பன், 12

கொடியேயுதயந்திரமாக கூர்பாக்கியத்தோன் தானிருக்க
படியாமைந் தோனிரண்டி லுபகரு மிரண்டோன் பத்தினிற்க
அடியாம் பன்னொன்றி லுக்கிறைவன் றுய்பலாபந்தனிலாயின்
வடிவா முப்பத்தாறின்மேல் வருடமெட்டுஞ் சுகமுள்ளோன். 13

பெருமுதயந் தனிற்புதனு மொண்பதனிற் குருவும் பிசுரன்
பூரணமதியும் பிருகுவுடன்கூடித்—திரமுடையன் சுவாமி கேந்
திரமிருக்கப் புவிமேற் ஜென்மித்த நாள்முதலாய் சிறந்த செல்வ
முடையன்—மருவரும் லக்கினத்துடனே சுவாமி சுபர்கடுவின்
மலிவுடனே சுவாமிசுப கேந்திரகோணத்தி—லிறிதி பெரிற்
ஜெனனமுதலாயுள்ளமட்டும் யோகவானவனென வுரைத்
தனர் பூங்குயிலே 15

குயிலேவுதயஞ்சுபமாக கூறுமுதயம் கியலாயத்
தியனுஞ்சுபருற்றிடச் சமியினிய குருவுஞ்சுபகேந்திரம்
பயினுங்கோணந் தன்னிலிருக்கிற் பகரும்வயதி லாதிநடு
துயரமன்றிச் சுகமடைவன் குதலைருத்தந் துணைமுதலாய். 16

துணையாம் உதயஞ்சுபமாக சொல்லுமுதய மிரண்டோடுமூன்
றிணையாந்தானஞ் சுபரிருக்க வியனும்சாமி யுடன்புகரு
மிணையுஞ் சுபகேந்திர கோணமதனி லிருக்கவந்ததனிற்
கணையாற்சுகத்தைய னுபவிப்பன் களபந்திமிர்ந்ததனத்தானே. 17

செப்பிலக்கினக்கோடி ரிகோண கேந்திரத்தி
னட்டபர்தன் வீட்டிற்சார நன்மைக்கோள் கூடநோக்கத்
தப்பிலாச் சுபர்கள்ராசி தன்னிலே சேருமாகி
லெப்பிலாக்கீர்த்தியாயு ளுயர்ந்தவாழ் வுடையனாமே. 18

பின்னிய விரண்டுங்கோட்டோய் மேவ லக்கினத்தின்மீது
மன்னிடை கீர்த்தியுண்டாம் வாக்குக்கோள் வாக்கினுச்சந்
தன்னில் நில்லாமேலேகுதி தானவனி மண்டாவெறட்டி
வன்னவ னிருக்கநோக்க வறிவில் சஞ்சலத்தனாமே. 19

சேயிலக் கினக்கோண்மாந்தி செய்யபனிரெண்டிற் சாரிற்
காய்ந்துறு பலந்தான் வேசைக் கலவியாலழிந்தகாம
னுயகன் பாபரோடே நண்ணிடிற் காந்தியில்லான்
நாயகோர் பெலமாய்ப்பின்னே தோன்றிடகாந்திசொல்லே, 20

வருந்தலக் கினத்தைவெய்யோன் மற்றக்கோள் றிதுநோக்கின்
மிகுத்த செல்வத்தன்றந்தை வீட்டிற் செல்வஞ்சேரு
மூகித்தவ்யாபாரமற்று முடிமன்னர் சேவையுண்டாம்
தொகுத்தகற் கீர்த்திவாழ்வு மாயுரு முண்டுசொல்லே. 21

சொல்லிய சனிதானோக்கிற் றோகைமுத்தாளைச்சேர்வ
னல்ல லக்கினக்கோணேக்கில் ராஜாக்கள் பிரியனவன்
மெல்லிய சுபக்கோணேக்கில் வெகுசுகவானுமென்க
வெல்லையிற் பாபர்நோக்கி லேதுமில்லாதா னென்னே. 22

தார்க்குணப் பட்டிடான்பரன் கோட்டோன்றவா றெட்டொறிற்
சத்துரு நீசர்பார்க்கத் தான்கொடு ராங்கிசமேறத்
தெத்தியநீசராகிற் சேர்ந்திடப் பிறந்தபேருக்கு
முத்திய பாக்கியங்கள் முழுது நாசங்களாமே. 23

பொருந்திடச் சுபரோன்பாணிற் பொன்னுடன் வாக்குமாகத்
திருந்திய பொன்பதிங்கோள் சேர்ந்திட பொன்வைராங்க
மருந்தவஞ் செய்யுமாசா னடியினை பக்தியாவன்
கருங்குழன் மாதேகேளாய் கனபவிசவனுக்காமே. 24

கனகன்மால் வெள்ளிமூவர் கருதியொன்றிலே நிற்க
வினையதை யொன்பாநோக்க விவர்சுபர் மத்தியாக
வினையவன் றர்மவானு மதிகபாக்கியமுஞ் சேரும்
புனைமயிலனையமாதே புண்ணிய விதியாமே. 25

சாலமதி தனக்கிரண்டிற் சனிதானிற்கிற
சந்திரனுர் தனக்குநாள்காம் வீட்டாதி
மேலவர்களுடன் கூடிக் கேந்திரங்கண்
மீதிருந்தாற் றந்தைபொருள் வேற்றோர்கொள்வார். 26

அட்டமத்துக்குடையோனும் குருவுமாக அவற்கொன்று நாவி
னிலே அரவமாக—அட்டமுடன் கொடியோனுங் கரியுமாக
துரிதமுடன் குருவீடா யிருப்பாராகுல்—சட்டமுடன் வயது
மூப்பத்தஞ்சுக்கப்பால் சாற்றினுர் திரவியங்கள் சகலமுமே வரு
கும்—திட்டமுடன் யிப்படியே அறுபதுமே லொன்றுவரை
செல்வருண தனவானுய்ச்சேர்க்கலாந்தேனே. 27

உரைத்திட லொன்றுவாக்குடைய கோள்பதி ஞென்றின்கோ
டிருத்திய மூவர்கூடிற் றிரவிய வானுமென்க
வருத்தபன் னென்றுவாக்கு வலியலக்கினத்தில் வாழ
பொருத்தமாய் ராசியுச்ச மொன்னுமோன் புகன்றிடாயே. 28

வென்றிடு மூன்றிற்கோளும் மேன்படு மிரண்டிற்கோளும்
மொன்றினிற் சேருமாகி லுடன்பிறந் தாரூர்ப்பொன்னும
நன்றிசேர் நாலிற்கோளும் நயம்பெரு மிரண்டிர்க்கோளும்
நின்றிடலக்கினத்தில் நிச்சயந்தாயான்னேளும். 29

நேர்பெருமேழிற்கோளும் நிலைபெரு மிரண்டிற்கோளும்
சீர்பெற வேழிற்சேரிற் றிரவிய மனைவியாலாம்
கோரிய வைந்தென்பானிற் கோட்களுஞ் சுபார்க்கூடிச்
சாரிலக்கினத்தான் மைந்தன் றந்தையால் வாழ்வுசாற்றே. 30

சாற்றிய வாக்குக்கோடான் றனித்து லக்கினத்தில் நிற்க
வாற்றிய விலக்கினக்கோள் அலவனவ னுஞ்சேரிற
ரேற்றிய பாவமெல்லாம் சூரியன் பனியும்போலாம்
நாற்றிசைக் கீர்த்தியானுய் நற்பொரு ளாளனாமே. 31

சுத்தமாய் வெள்ளியிந்து மன்றியே சுருதிமூன்றை
வெற்றிசேர், சுபர்கணோக்க மென்சுபார் சியங்க.

மத்திலே பிறக்கின்மாதே அதிசுக போசனங்க
ளறறிவன் புசிப்பனென்றே யுரைத்தனர் தெளிந்தமேலோர். 32

அதிகநான் குடையோன்மிக்கா யாந்தநான்கிடமுமிக்காய்
துதிசெய்யுஞ் சுபர்களோக்கத் தோன்றுசாதகர்கட்கெல்லாம்
நிதியொடு செல்வமுண்டாய் நீதிநூன் முறையிற் சொன்ன
பதியினில் வாகனத்தில் பாக்கிய முண்டுபாவாய். 33

பாக்கிய நாவின்கோட்போய்ப் பதிந்திட நான்கிற்றானே
தாக்கிய புதனும்கூடத் தலந்தனை வெள்ளியாற்க
நோக்கிய சுபக்கோளங்கத் தோன்றமே சேர்விலாமற்
றேக்கிய மதலைக்கெல்லாம் தீர்க்கவா கனங்கள்செப்பே. 34

மதிதனக்குக் கேந்திரத்திற் குருவேனிற்கில் வாலவற்குக் கெச
கேசரியுமாகும்—அதிபெருகோள் அரியானி யதன்முன்பாகத்
தோன்றுகட கரிபோல வினைகளோடும்—அதிபதியா யிவன்
வயது எழுபது மட்டுண்டாம் ஆகமசாஸ்திரவேத மாராய்வா
னென்றும்—பதியதனி லுரைத்திடலாம் யின்னம்வேண பாக்
கியங்கள் கொடுத்துநலம் பகருமாதே. 35

தீர்க்கவான் பதியலங்கஞ் சிறந்த சம்பந்தியாக
வாக்குநான் குடையோனந்த மாமதியதனிற்சேர
நீர்க்குட முலையினாளே நிலைத்தவா கனத்தைச்சொல்லிற்
கூர்க்குங்கா லிவனுக்கெல்லாம் குதிரைவாகனத்தைக்கூறே. 36

குதிகொளு மதியிரண்டின் கூரிய நான்கிலேனு
மதிசுபரோடுகூட வதுசுபார சியாக
விதிவழி தெரிந்தமேலோர் விதித்தது விண்பக்கேளாய்
புதுமதி நூதரினானே புரவிவாகனம் பாவாய். 37

புரவலர்நாவின் கோட்போய் புதன்மதி சனனக்கோளை
நிரவிலக்கினத்தில் நிற்கில் நீண்டபல்லக்கு வாழ்வாம்
தாணிநான் குடையோன்வெள்ளி தனித்திலக்கினத்தின்கோணு
காரிலக்கினத்தே நின்றால் நல்லபல்லக்குமாமே. 38

பணிசெய்ய வெள்ளியிந்து பகருநான் குடையோடொன்றாய்
நனிசிறந்தொன்றாய்க் கூடி லவனியிற் பல்லக்கேறும்
கெணிதநூன் மறையோருன்கோன் ஸௌர்மதி யிருக்கும்கூடித்
துணியுமேல் கேந்திரகோணம் சுகிப்பது பல்லக்காமே. 39

சிறந்தநான் குடையகோட்டோய்ச் சேரப்பன் ஞான்றீன்மீது
பரந்தநான் கினிலேனிற்கப் பதினொன்றிற் செவ்வாய்சேர
நிரந்தரு செல்வமானும் நிதிபெரு கீர்த்திமானும்
பிரந்தசே புலமையாளும் பின்னமே யில்லைமாதே. 40

பின்னையொப்பில்லா நான்கோன் பேசும்நான் கதிலேனிற்க
பொலவன ஞேறிசேர்ந்து பொருந்துகேந்திர திரிகோணப்
தன்னிலே யிருக்கவெய்ய சாமரைக் குடைபல்லக்கு
பொன்னோடு மேடைவீடு பூமியும் புரக்கும்பாவாய். 41

பூமினிற் புதன்போயுச்சம் பொருந்திய ராசியாக
மேவுமே கேந்திரகோணம் வித்தைவாகன சம்பத்தாம்
கோவுடை நட்பாய்நல்ல குணமொடு கீர்த்திவானாய்
காவியங்கமலக்கண்ணாய் களிப்பொடு செல்வம்காணே. 42

களிப்புடை நாலின்கோனும் கருதுலக்கினத்தின் கோனும்
விளிப்பொடு தங்கடங்கள் வீட்டிலே மேவ வொன்பான்
அழுந்திய கோனுமைந்தாம கோனுமிந் நான்குகோனும்
சுழிந்திடு சுபவர்க்கமொன்றுமேல் சுகம்சொல்வாயே. 43

தோன்றுமோர் பிலன்களாகச் சேர்விராதி லக்கினத்தில்
ஊன்றுகோள்ம னைக்கோளோடே ஒருவருக்கொருவர் பார்க்க
போன்றதோர் குலகோட்டுமை பொருள்சுகம் தீர்க்கவாயுள்
மேன்றடும் சிவிகை காலாள் மிகுதியாய் வேந்தனாமே. 44

மெய்த்தநான் குடையோனொன்பான் யெனிலுடன் ஞானொன்றோன்
வாக்கோன் உய்த்த யினனுன்குபேரும் உற்ற லக்கினத்திலாக
செய்த்திவர் அபகாரத்தில் திரவிய லாபம்சொல்லே
மைத்தடங் கண்ணினாளே வருமிராச்சியத்தில் வாழ்வே. 45

புவியிலொன்பதில்நின்றோனும் பொருந்துபத்தினில்நின்றோனுங்
குவியிலக்கினத்தில் நின்ற கோட்களுஞ் சுபர்களாகி
நவிலுச்சங்களாக லக்கினாதிபனால் பார்க்க
சிவிகையும் பொன்னும் வாழ்வுஞ் சிறப்பொடு சேரும்தானே. 46

சேர்கின்ற மறையோனேனும் சிறந்தான் குடையோனேனும்
கூர்கின்ற சுபர்களோடே கூடியொன்பதிலே நிற்கச்
சார்கின்ற ராசியிக்கேல் சகலபாக்கியங்களோடே
ஊர்கின்ற சிவிகைவாழ்வும் உண்டென்பர் வெகுநாளைக்கே. 47

கனகனும் நாவினோனும் கனபல வான்களாக
வினவிய வாட்சிதன்னில் மேவியே நிற்குமாகில்
புனமயி லனையநல்ல பூவையே புகலக்கேளாய்
தனமொடு பாக்கியவானாய் தண்டிகை பெறுவானே. 48

தண்டிடநாவின் கோனும் தனித்தஒன்பானின் கோனும்
பண்டியிற் பதினொன்றாகப் பதினொன்றைப் பிலத்துநோக்க
தண்டிகைபுவியின்மிக்க செல்வமுஞ் சிறப்புமிக்கக்
கொண்டிவன் சகலபாக்கிய குரிபுரைன் கூறுங்காலே. 49

புவியிலக்கினத்தின் மாலாய்ப் பொருந்துமொன்பதிலேயுச்ச
ரிவரிரண்டுடையோன் கேந்திரமேறியே நிற்குமாகில்
செனியினி லுரைத்தசொல்கேள் செகமெலா மிவனேயாளல்
மதனியிலவனைச்சிம்மா சனபதி யாமென்பாரே. 50

ஆமெனச்சுபர்கள் கேந்திரமாக வொன்பதனைநோக்க
தேமென்ற வாக்கோன்கேந்திரம் சேர்ந்திடச் சுபர்களோடே
போமென்ற வாக்கிலுச்சம் பொருந்திய கிரகம்பூண
தாமென்று புவியிற்சிம்மா சனங்களை நோக்குவாரே. 51

நோக்கி லக்கினத்தோன் நான்கோனுங் கருப்ஒன்பதின்
கோள்மூன்றும் பாக்கியத்ததிபனுக் பத்துளோன் பதியஒன்றில்
ஆக்கிய சுபர்களெல்லாம் அவனி லக்கனத்தைநோக்கி
நீக்கிய பலனைச்சிம்மா சனத்து நிகர் சொல்வாரே, 52

திகிரிலப் பத்தின்கோனும் நீண்டலக்கினத்தின் கோனும்
பகருமென்பதி னுள்ளோனும் பத்திலே பதியபத்தோன்
புகருலக்கின சம்பந்தம் பொருந்த நின்றாலும் பூவிற்
சுகியனா மிவர்க்குசிம்மா சனமெனச் சொல்லலாமே. 53

சொல்லிய மறையோன்வெள்ளி தோத்திய ஒன்பதாங்கோள்
எல்லையாங் கேந்திரகோண மிவற்றிலே நிற்குமாகில்
வல்லியே அவனனேக வாகனற் றிசமானுக
ஒல்லையின் மண்டலாதி பதியென வுரைக்கலாமே. 54

உரைக்குநான் குடையோன்பத்தில் உயிர்பினாறுயிநிற்க
நிரைத்தபத் துடையோன்கோக்க மீந்திடக்கூடியேனும்
கனத்தசிம்மாசனத்தில் கனபவு சாருமென்பர்
துரைத்திசை யபகாரங்கள் துடங்கும்கால் சொன்னதாமே. 55

சொன்னகோவொன்பானோன் றோன்றிட நன்னின்மீது
யின்னமில்லாதான் கோன்பிறந்தலக்கினத்திறயோக
அன்னது சுபர்வீடாக வதிசுகவானுமாகி
இன்னல்செய் சத்துருக்கள் இருநிதி யிவனுக்காமே. 56

அதிகமாஞ்சுபர்முன்றாவந்த நான் குடையோன்மிக்கேற
புதுமைமா மூன்றின் கோனும் பூரணபலமதாக
வெதுமையாங் கல்வினுமேல யிசைத்த வீடிவனுக்கென்பர்
துதிசெய்யுமிவறைன்யோகந்தலையுமோ சொல்லின்மாதே. 57

நாடிய வொன்பதாங்கோள் நண்ணியமறையோன்றானும்
நீடிய சுபவர்க்கங்கள் நின்ற வொன்பதின்றோனுங்
கேடிலார் சுபர்களாலல் கிட்டுமே பாக்கியங்கள்
ஓடிய திசையினூலே யுறுமென வுரைக்கலாமே. 58

சொல்லுமொன்பதிலே நின்றோன் றோன்றிய பத்தின்கோனும்
மெல்லவுச் சாட்சியங்க மேரியே யிருக்கின்றாலும்
மொல்லை இந்தி லக்கினத்தானுச் சாட்சியம் கிசமாக
நல்லது ராஜயோக நல்வருமிக்கேல்னன்றே. 59

நிகரொன்பான் செவ்வாய்நோக்க நிலங்கள்சேத்திரங்களுண்டாம்
பகரொன்பான் புந்திநோக்கப் பாக்கியமிகுதியாகும்
புகரொன்பா னோக்கமாகிற் புரவிகட் கிசமாறுவன்
நகமொய்யா னிந்துநோக்க நன்றியல் சுகவாறுமே. 60

நன்றியல் சனியேயொன்பான் ராசியை நோக்குமாகில்
றூன்றிய மதலைவாயி லுதடுகள் பருத்துக்காணும்
மென்றவத் தலத்தைவெய்யோ னிறையவன் றிங்கணோக்க
கன்றுகள் பசுக்கள்வாசிக் கனகங்கள் வித்தையாமே. 61

கனக்னுங் கதிருஞ்சேயுங் கருதியொன்பதனை நோக்க
வினையவன் சேனைகாப்பா னென்றும் வாகனரூடமுண்டாம்
புனைய மாற்றனங்கள் சேரும்புக ழெறுவைத்தநோக்கி
வினையவன் விநோதவித்தை யாக்கமாய் விளைவித்தாலே. 62

ஆக்கிய மறையோன்வெள்ளி யாதித்தன் மூன்றுபேரும்
நோக்க லொன்பதனை வித்தை கோசத்தி லதிகமாகும்
தேக்கிய சனியாதித்தன் செய்யனொன்பதனை நோக்கப்
பாக்கியக் குணங்கள்நல்ல மதிபுத்தி யவன்பண்பாமே. 63

பண்படுத வொன்பானை பணிமதி மறையோன் செவ்வாய்
இன்பட நோக்கிற்சேனை திரள்சுகந் திரியனேக
நண்புறு மதியுமானு ராசியொன் பதனைநோக்க
கண்பெருதிரியும் வீடும் கட்டின்மெத்தைகளுமாமே. 64

அன்னிய தலமொன்பானை யந்தணன் பிருகுமானு
முன்னுமேல் அதிகவித்தை பொக்குமெல்லாரு நோக்கின்
மன்னனாய்த் தனவானுக்கு மைந்திடச் சுபர்கள் கேந்திர
பின்னதெல்லாரும் பாரி லிவனுக்கொப்பில்லையம்மா. 65

நுட்பிலொன்பதிலே திங்க ளுறைந்திடப் புந்திகாரி
பொற்புற நோக்குமாகிற் பூமதியாவதென்ப
வப்பியுஞ் சாட்சியங்கோ ளமைந்திட சுபர்கள் நோக்கச்
செப்பிய வோர்தனுவன் தேசத்துக்கெல்லாமே. 66

தேசத்துக் கதிர்வெண்டிங்கள் சேர்ந்தொன்பதினிலே நிற்கப்
பூசித பாக்யனாளும் பொருந்தியக் கன்னேறக்காட
கேசித்த சேயேற்றுங்க நிற்கச்சேய் கதிரோன்கூடிப்
பாசித்த சகாரசற்கும் பற்றியபிரபனாமே. 67

## புத்திர பாவம்.

அஞ்சினோன் பாவராகி யவிருந் திடத்தின் முன்பின்
கஞ்சமாய் சுபரும்பாபர் கலந்திட அஞ்சினோற்கு
மிஞ்சவே ரொன்பான்பத்தில் விளங்கிய குருவேயானால்
பஞ்சமஞ் சுத்தனீடேற் பஞ்சபுத்திரருண்டாமே. 1

அஞ்சினுக் குடையோன்சேய்தா யதற்கோ ரஞ்சினோன் சுபரு மே யாகி—மிஞ்ச மிக்கோளும் பாம்புடனிருக்கில் விளங்கிய புத்திரனைபம்—விஞ்சையாய் சேரும் சுபருமேயிருக்கில் விளங்கிடும் பஞ்சபுத்திரர்கள் அஞ்சிடா திருக்கும் பாம்பவர் தனக்குச் சொல் பரிகாரத்தைத் துலேயே.

தொலேவிலானிற்பரிதினைய பாம்புதோய்ந்திடும் வேலேயிற் றெடுத்த—அலேவிலா மனத்தோடுந்த நெய்யதனேடாவி நெய் கலந்தினிறைய—தலேயிலே பாற்றேய ரவிதனைப்பொன்றூற் சமைத்ததில் விட்டுவோர் மறைதலைத மேடியேய் புத்திரரே விந்திடுமென் றுரைத்தனர் மேலோர். 3

அஞ்சினோன்பவராய் கேந்திரமதனிலிருக்க ஞெடிருந்திடவஞ் சில்—மிஞ்சிய சுபருந் தனித்திருப்பாரேல் வேண்டிய வஞ்சினுக் கஞ்சோன்—பஞ்சமமலது கேந்திரமதனிற் பாவருஞ் சேர்ந்திடா திருக்கில்—விஞ்சையாம்வேத மானுடனுபயம் விரிகுழல் மா தெனை விளம்பே. 4

விளங்கிய மூன்றும்கோளன் வேதனுயவர்வீடாக
இளங்கொடி மூன்றில்மூன்றோ னிறைவர்க்கு மறைவர்னேில்
வழக்கிய பஞ்சமத்தில் வரும்பவர் தனித்துநின்றால்
உளங்களி சதுரமானு வுதித்திடு முபயம்பெண்ணே, 5

மதலைதனிலே குருவிருக்கவும் அந்தானன் வருஞ்சுபார்ப்
மறையாமலிருந்திட்டாலும்—மதலையவன் தானந்தக் குடை
யோன் றன்னைவருங் கொடியபாவர் நோக்காமல்நின்றால்—மதலை
யவன் றனக்குதவா தென்றுசொல்லலாம் வருங்கடவுள் கணைப்
போற்றி வருவாராகில்—மதலைகர்ம புத்திரரு மேகமென்றே
வழுத்தினோர் பூர்ண மதிவதனமாதே 6

அஞ்சினோன் புகர்பொன்னென்று யமர்ந்திடவஞ்சோன்வீட்டில்
பஞ்சமா யிக்கோடன்னைச் சார்ந்திட பவர்நோக்கில்லா
விஞ்சையாய் வளரும்சேய்க்கு விதிதனர் கணிதமாய்ந்தோர்
அஞ்சென புதல்வர்மாதே யறைந்தனர் தாணியோர்க்கே. 7

அஞ்சினோன் மறையுடனே யுயிருக்கெட்டாகி யமர்ந்திடவே கரி
நோக்க வஞ்சோன்வீட்டில்—தஞ்சமுடன் கொடியபவர் தனிக்
கக்காரி சதிருடனே அரவுசே யிவர்கள்தானும்—விருசையுட
னேக்கிடவே வளருஞ்சேய்க்கு விதித்தனறு னிரண்டுடனே
யைந்து பெண்கள்—தஞ்சமுடன் தோன்றுமே தாணிமீதில்
தப்பாது கணிதநூல் சாம்பரே. 8

பாரியதோர் சேயரவு கரிபொன்தோசம் பகர்ந்தனர்கள் தப்பாது
தாணிமீதில்—சேரியல்பாய்த் தோன்றியதில் நாலுபெண்கள்
சேதமொடு மைந்தரொன்று நாசம்காட்டும்—வீரியமா மந்தனை
ஞற் ஆரிய ஞானைப்படியேப் புதல்வருண்டாம் ஆகம நூற்படியா
கக்கணிதம் செப்பே. 9

மதிமகனும் பஞ்சமமாய் தனிக்கவக்கோள் வருமனை கேந்திர
மாகி வளரவரில்—சதியுடனேன் றுகிடவே மதியும்கூடித்
தானிருக்கச் சுபர்நோக்கப் பயர்களில்லம்—துதிபெறவே குரு
மறைமையச் சுபர்கள்நோக்கத் தோன்றியசேய் மைந்தர்தொகை
நாலுமாது—விதியுடனே உதயமிரண்டெனவே செப்பு விளங்
கியசே யிரண்டொழிய மாதிரண்டே. 10

பஞ்சமாதிபனும் பஞ்சமமதனிற் பதிந்திட பாயர் நோக்கிடவே
தஞ்சமா முயிரில் மறையவன மர்ந்திதிருத்திட சுபர்களவீடானுல்

அஞ்சவே புவியிற் றோன்றிய புதல்வர் அழிந்திடுபொல்காரியினால்
அஞ்சிடா திருக்க தொல்புவியதனிற் சொல்லுவோம் சிந்தையொ
ன்றாகி. 11

ஒன்றுபோற் சதியும் பதியுமோர் மனதா யுகந்துபொன்னுடமே
செய்து—நன்றென வேதவிதி முறைதெரிந்த நாலுமேழிரட்டி
யந்தணரால்—அன்றந்த நாகற் கர்ச்சனை திபாராதனை செய்தன
மழித்தே—நின்ற பஞ்சமத்தோரேறையி லதனை நிதியுடன்
மறையவர்க் குதவே. 12

உதவிடப்பாவமொழிந்திடும் பாதியுளந்தப் பாதியின்வகையை
விதியுடனேக்கப் பூரணை சோமவாரமும் விளங்கியகாலில்
சதியுடனிருவர் நோன்பிருந்தன்னஞ் சமைத்துடன் பாங்களுக்
களித்தால் அதிகமாய்ப் புலவரோன் றுடனொன்றாய் அமர்ந்திட
விருவர்பெண்மாதே. 13

அஞ்சினுக்குடையோன்தானும் அட்டமர் தன்னிற்சேர
வஞ்சியர் தானம்நீக்கோன் வந்திட முன்பின்பாவர்
மிஞ்சவே யிரைவன்சேர்ந்த வீட்டினில் மறைவதானால்
விஞ்சையாயழியுமைந்தர் விதித்தன ரென்றேயாகும். 14

பொன்னவன் நீசமாக புத்திரதானம் சுத்தம்
அன்னவனதற்குநாதன் அழிவுடன் மறைவதாகில்
இன்னிலம் பிறக்குஞ்சேய்க்கு இசைவுடன் மைந்தரற்பம்
கன்னியர் தோஷம்காட்டும் காரணன் மறைவதானால். 15

பொன்னவன் மறைவதாகப் புத்திரதானம் சுத்தம்
அன்னவன் மறையாதாகி அருணன்வீடதனிற்சேர்ந்தால்
இன்னிலத்துடனேவந்த இசையுள சேய்க்குமைந்தர்
உன்னிதமாக நாசமுரைத்தனர் தாணிமாதே. 16

குருவுடன் காரியொன்றாய்க் கூடிடப்பவர்வீடாக
வருமக்கோள் தனக்கீராறில் வந்திடப்பஞ்சமத்தோன்
கருதியாய்ச் தனிப்பாலுகிற் றோன்றிடும் சாதகர்க்கு
ஒருவது புதல்வயோகம் வகுத்தனர் புதல்வியொன்றும். 17

குருதியுமஞ்சோ ருகிக் குருதிடப் பஞ்சமத்தில்
வருமதி தனக்குமுன்றில் மதிமகனிறையவன் வந்தாற்
சுருதியாய்ப் பிறக்குஞ்சேய்க்குத் தோன்றிடு மதனேகம்
உறுதியாய்க் கணிதநூலோ ருரைத்தனர் சாதகர்க்கே. 18

அஞ்சினிற் காரிபொன்றே னமர்ந்திட வஞ்சோன்று னும்
தஞ்சமா யுயிர்க்கீராறில் தங்கிடப்பாவர்நோக்க
வஞ்சியே பிறக்குஞ்சேய்க்கு வகுத்தனர் புதல்வர்நாலு
அஞ்சவே கரிதோஷத்தா லழிந்திடும் தரணிமீதே. 19

மதிமக னஞ்சோனுமி லளர்பிறை யுடனொன்றில்
சதியுட னுயிருக்காறிற் றரித்திட வஞ்சிலுமெய்யோன்
விதியுடை நிறைவன்பார்த்தி விரைவுடன் மறைவதானால்
பதிதனிற் றோன்றுஞ்சேய்க்கு பகர்ந்தன் புதல்வனொன்றே. 20

இறையவ னுயிர்க்கீராறில் இருந்திடப் பாவரோடு
விரைவுட னஞ்சிற்பாவர் விளங்கிட வஞ்சோன்று னும்
பிறையுட னேர்வீடாகப் பிறந்திடும் சாதகர்க்கு
முறையுடன் கணிதமாய்ந்தோர் மொழிந்தனர் புதல்வனொன்றே. 21

அஞ்சிலிலரவமமர்ந்திடவந்தியதில்வா அஞ்சிலோன்சுபமாய்த
தஞ்சமா யுயிருற்றரித்திட வல்லி சார்ந்திடப் பாவர்வீடாக
விஞ்சையாய்றைவன் மறைந்திட மதனை விளங்கிடச் சுபர்கள்
நோக்கிடுமால்—மஞ்சனும் பிறந்து மாய்ந்திடுமென்றே வகுத்
தனர் கணிதநூலாய்ந்தோர். 22

ஆய்ந்திடும் புதல்வராவுட னலரியா யிருதோஷ மெய்திணர்
பாய்ந்திடா திருக்கப் பணியுமேகொலனும் பாவம் நீ யிலக்கிட
வேண்டிற்—வாய்ந்திடும்பதியில் மாசுணம்பொன்றல் வகுத்
தொரு பறையவன் றனக்கே—ஈய்ந்திட மனையா ளுடனிருந்
தேற்க எனிடும தோஷமென்றியம்பே 23

இயம்புவார்பூசைக் கிசைந்தவோர்வழியே இருவருமொருமனதாக
சுபம்புவாய்கொடுக்க தோஷமுந்திரு சொல்லுமேவாம் சூரியன்

றனக்கு—வய்ப்படரோம்புமாத மீனொன்பான் வாசமுமாதி நாளை
தனில்—நயமபட மறையோரருவருக்கன்னம் நல்கிடப் பாரினில்
நன்றே. 24

நன்றந்தகளில் மங்கையுந்தானும் நாகர்லேம்ப ணசையுஞ்சுற்றி
நின்றந்தப்பானு தன்னையும்போற்றி நீதியாயோர்பொழுதன்னம்
தின்றந்தத்தினமே சிவதரிசனையும் செய்திடத் தீங்கெல்லாம்
நீங்கும்—என்றந்தப்படியே வழுவிடாதிருக்கி லிருந்தது குறைந்
திடாதென்னே. 25

அஞ்சினிற் புகர்பொன்னோன்று யமர்ந்திட வஞ்சின்கோணன்
தஞ்சமா யுமிருக்காறிற் றனித்திடப பிறந்தசேய்க்கு
விஞ்சையாய் புதல்வர்சானு விருத்தனர் பெண்மூன்றாக
அஞ்சவே கரிசேய்தோஷ மழிந்திடும் வரும்பெண்மூன்றே. 26

மாலவனஞ் சோனுக்கி வருடமீன நீசமேரி
சாலவே புகரோ டொன்றாய் தரித்திடச் சுபர்பாறுமற்
றோலதனில் மறையன்சேரக் கொடும்பல ரதனைநோக்க
பாலகன் றனக்குமைந்தர் பகர்ந்தனர் தோன்றுதென்றே. 27

உரைத்திடா மைந்தாங்கோணே முறுமிட மறையுமாகில்
திருத்திய அஞ்சோனுதன் 'அல்லது அஞ்சினஞ்சோன்
நிறைக்குரு வாகிச்சென்ற விடந்தனிற் பரிதிசேர்ந்தால்
கருத்தரி லாமேலவந்த கருதுசே யழிவென்றோதே. 28

குருவுடன் பரிதிநின்ற திங்களில் குருவாரத்தில்
வருமந்தி யமடிக்கின்னம் வரைமுயிற் றொடுத்துவேத
னுருவினைப் பஞ்சமாவி னுபசந்தசெம்பொன்னுலிட்டுப்
பெருகவர் செய்யவசாந்தியாப பிழையில்லைமறையோர்க்கிதே. 29

அஞ்சிடஞ் சுத்தமாக அதன்மூன்றின் அராவுற்றாலும்
அஞ்சினுக் கஞ்சாந்தானம் மூழிகம் கரியுற்றாலும்
அஞ்சிஞ் ராரலேக அல்லது புகரனுலும்
வஞ்சியே ஒருகாலத்தும் வந்தசே யுதவாதென்னே. 30

பஞ்சமன் குருவாயுயிர்க்கிரண்டினிலே பதிந்திடபஞ்சமந்தன்னில்
விஞ்சையா யுயிரோன் தனித்துமேலருக விளங்கிய இரவியும்
சனியும்—தஞ்சமா யாவுங்கரும கேந்திரத்திற் றரித்திட மதியு
மூன்றுமில்—அஞ்சவே புதல்வர்தனக்குமே தோஷம் அறைந்
தனர் பெரியவர்தாமே. 31

தோஷமா மரவுசாபமும் பெரியோர் தொல்வினைப்பயன்களு
மிருதி—வாசமா யரவுசாபமும் தீர்த்துவந்திட அஞ்சினிற் சிவ
னில்—நேசமாயரவு சுப்பிரமணியம் நின்றிடச்செய்துமே முடித்
தால்—பாசமா மனைவியிரண்டினிற் குழந்தைப் பலித்திடுமெனச்
சிலர் மொழிந்தார். 32

அஞ்சினுக்குடையோ னீசமாயிருக்க அவருடன்பாவருமிருந்தால்
விஞ்சையா மவர்க்குமைந்தர் களுதவாவிதிக்கலாங் கணிதநூல்
விதியால்—வஞ்சியர் தனக்குமைந்தர்களுதவும் மந்தனுமாட்சியா
யிருந்தால்—குஞ்சரம்போலப்பாலகனுதவும் குமாரவேள் தோஷ
மென்றுரையே. 33

புத்திரத் தானநாதன் பொன்னவ னுச்சமேனுஞ்
சத்ருவீட்டிற்றனே தனித்திட மறைவானாகில்
புத்திரத்தானத்தோனும் பொன்னவன் வீட்டிலேனும்
பத்தியாய் கேதுவிற்கிற் பாலகன்றோஷமாமே. 34

தோஷமா மிருதியாகும் தொல்வினை யதனால்மெத்த
பாசமா முயிரைக்கொன்ற பாவத்தால் குளிக்கென்றும்
நேசமாய்ப் பெரியோர்தானும் நிகழ்த்தினர் கணிதவாக்கால்
நாசமாய்ப் போகுமதோஷம் சேதுவிற்றீர்ப்பானாகில். 35

பஞ்சமன் புகராய்க்கரி வீடதனிற் பதிந்திடமறைந்திடவக்
கோள்—விஞ்சையாய்ப் புகர்வீடதனிலே மாந்தி விளங்கிய
வஞ்சகாய்மெலிந்—தஞ்சமாய்க் குருவுமுயிர்க்கு மூன்றிடமாய்த்
தனித்திடக் குடும்பனுமுயிரில்—அஞ்சவே வரினுமழிந்திடும்
பாலர் அறிவித்தார் பிரேதசாபத்தால். 36

மதியுயிர்தனக்கு பஞ்சமமதனில் மாந்தியுங்காரியும் வரினும்
ஆதிபெருங்கருமன் றனக்கு அஞ்சிடத்தில் சூரியன் சேயுடன்
பாலாய்—விதியுடன் வர்ணும் பாவங்கள்தோஷம் மிகுத்திடும்
பிதிர்வழி யதனால்—பதியினில் முன்னுள் தெய்வமதையாலே பலித்
திடுமென்றனர் மூதோர். 37

மொழிந்தனர் பெரியோர் நிவர்த்தியேயாக மோசமில் சேதுவில்
ஸ்நானம்—கழித்திடப் பிரேதசாபம் முன் செய்த கட்டாயப்
பாலத்தில் நின்றும் தெளிந்திடச்சாந்தி திலமுடனேனும் தெரி
வையவர் மேலவர்தமக்கு—அழுத்திட அன்னம் அநேகமாய்க்
கொடுத்தால் அகன்றிடும் பாவங்களெல்லாம். 38

பஞ்சமன் கரியாய் மறைந்திட லுச்சிற்பணிமதி புகருடன்சேயும்
விஞ்சையாய்த்தரிக்க வேதிய னுச்சம் விளங்கியபிரவியும் நோக்க
தஞ்சமாயுயிரில் மாந்தியுந்தனிக்க சனிமகன்வீட்டிற் கேதுவிற்
கொருசியபுதல்வர் தனக்குமேதோஷம் முறைத்தனர் பிறந்து
போகிடுமே. 39

போவது பாவ சாபமுன்செய்த புண்ணிய விரோதமுமதனுற்
சாவதுசிசுக்கள் தங்கிடவேண்டிற சாற்றினர் நிவர்த்தியின்வகை
கேள்—ஆவதுகதிரோனினிற்பொங்கல் அமைத்திடச் சோம
வாரத்தில்—கோவதுபால் நெய்விளக்குடன் சிவனைக்குறித்து நீ
விரதங்கள் கூறே. 40

கூறிடநந்தி தனக்குமேபூசை குணமுடன் செய்துநீமுடித்துச்
தேறிட சர்ப்பசாந்தியுநாகர் தெரிவையர் பணிவனையாகில்
ஆறிடும்தோஷமகன்றிடும்பாவம் அமைதியாய் பாலருந்தோன்றி
மீறியகர்ம சந்ததியாக விளங்கிடுமென்றனர் மாதே. 41

பொன்னவன் றனக்குஐந்திர் பொருந்திய ராகுமாந்தி
நன்னய மதிக்கொன்பானில் நலமுற வந்துதோன்றி
இன்னமுஞ் செவ்வாய்லாப மிருந்திதா லெங்கைநோக்கச்
சொன்னசொல் புத்திரர்க்குத் தோஷமேவகுத்தார்மேலோர். 42

புத்திரதோஷமுண்டாம் புனிதவேள் குமரன்பாதம்
பத்தியாயிருப்பானாகிற் பாலகனுண்டாம் பின்னும்
சித்தியாய் கிரகஹோமம் செய்துமே சர்ப்பசாந்தி
மெத்தவே செய்துகொண்டால் விளங்கியதோஷம் தீரும். 43

பஞ்சமத்தோன் குருவாகி உயிர்க்கொன்பானிற்பதிந்திடவே பக்கோள் தானரவோடேகித்—தஞ்சமுடன் குருவீடாய் உயிர்க்கிரண்டில் தரித்திடவே மிரவிமால் புகருங்கூடி—விஞ்சையுடனஞ்சுதனை விரைந்துநோக்க விளங்கியதே விலக்கனத்திற் சேயுமாந்தி—கொஞ்சிடவே வருஞ்சேய்க்குப் பலன்தான்சொல்வேன் கோதையினும் புத்திரர்க்கு பவிதமுண்டாம். 44

புத்திரர்க்குத் தோஷமிகச் சொல்வோமப்பா யோனசென்மத்தில்வந்து தொடர்ந்தபாவம்—பத்தியில்லா பிதிர்வழியில் பிரேதசாபம் பாவையர்கள் தோஷமுடனசாண்பாவம்—சித்தியினால் வந்தகர்ம முண்டாம்சொல்வேன் சிவதவத்தால் கர்மத்தால் பாவம்தீர்ந்துப்—பத்தியினால் சிவநேசன் மறவாதெனில் புதல்வருமே தான்றோன்றி புகழுவாழ்வார். 45

புத்திரதானநாதன் பொன்னொடு யுயிர்க்கிரண்டிற்
பத்தியா மாவுமாந்தி பதிந்திட பிறந்தசேய்க்கு
புத்திரதோஷமுண்டாம் புகழ்ந்தனர் மறையோனாலும்
அத்தியிற்றொடர்ந்தபாவம் அதுவென மொழிந்தார்மேலோர் 46

புத்திரத் தானநாதன் புகர்கதிர் மதிசேயான
இத்தனை பேரைப்பொன்ன சேர்மையாய் நோக்கானாகிற்
புத்திரர் ராசிலெட்டுக்குள் பிறந்துதான் நாசமாகும்
சத்தியம் பின்னால்புத்திரர் தழைத்திடுந் தீர்க்கந்தானே. 47

உயிரினில் மாந்திநிற்க வொன்பதில் எழுபட்டோனும்
திருதியிற் பூமன்கேது நின்றிடிற் பிரேதசாபம்
கருதிய ராகுசாரி கனகனில் லதனிற்சார்ந்தால்
கருதியாய்மறையோன்சாபம் தோஷமேவகுத்தார்மேலோர் 48

புத்திரத்தானநாதன் பொன்னனுப் புகர்வீடேகி
சத்துரு பார்க்க அந்த தானத்தைச் செவ்வாய்நோக்க
பத்திய பிதுர்சாபத்தால் பாலகன் றனக்குத்தோஷம்
புத்திரர் மிகவேதோன்றிப் போய்விடும் பூர்வசாபம். 49

பூருவ சத்துருக்கள்புண்ணிய மறையோர் தேவர்
சீறிய தோஷத்தாலு மிக்கவே புதல்வர்தோன்றி
பாரினில் மரணமாகும் பாவையர் பிறந்திறக்கும்
நாரியர் மனைவியற்கு நலமிலா சோகமாமே. 50

தோஷமே மிகுதியாக் தோன்றிய சாதகர்க்கு
வாசமா முயிர்க்குள்ளோரது மாந்திபான புகர்மாலோடு
பாசமா மைந்திற்கூன்ற பகர்ந்தனர் சற்பசாந்தி
ஆசையாய்த் தீர்ப்பாரனில் அமர்ந்திடுந் தோஷம்போமே. 51

கேடிலா மைந்தில்ராகு இராமைந்துடையோ னாறெட்
டோடுபன் னிரண்டிலேற வொருபிள்ளை யேனுமில்லை
நாடிய மைந்திற்சென்ம ராசிக்கோ னிற்கமைந்திற்
றேடிலக் கினத்தோனின்றுந் தத்துப்புத்திரருண்டாமே. 52

புத்திரத் தானத்தாதி பேகனுப் புதன்வீட்டில்
புத்திரரில்லைநல்லோர் கூடிடிற் பிறந்துசாவர்
அத்திடு பாபர்சேரின் மகவில்லை எருதுகும்பம்
வித்தக யோரைப்பார்க்க மகவில்லை விளம்புங்காலே. 53

விளம்புமே மூரமிடத்தோ னுச்சமே நீசமின்றிக்
களங்கமில்லா திருக்கிற் கருதுமத்தாருக்கில்லை
இளங்கொடி யாருக்குண்டா மேழுளோ ருச்சநீசம்
வளம்பெரு மங்கிசத்தின் மருவிடின் மகவுண்டாமே. 54

சேதமைந்திற் சிறந்த மதியுறில்
நீதிசேர் பிள்ளையொன் றுறுநேமியில்
போதுமற்றும் பிறைப்பது தானிலே
வேதமுற்றவ சோதின னென்பதே. 55

புத்திரனேழாமாதி பொருந்துகேந்திர கோணத்தில்
உற்றிடற் பலவானாகி யோகமா றதிபன்றானுஞ்
சித்தமாய் கூடினானுந் தெரிசினைப் பார்வையானுஞ்
சுத்தமாய்ப் புதல்வரில்லை யெனமறை சொல்லுந்தானே. 56

புத்திரத்தானநாதன் புகழுலக் கினத்திலேறச்
சத்தியலக்கநாதன் சந்திரொடு வைந்திலாகப்
பெத்தசாதகர்க்குப்பிள்ளை யில்லையாம் பிறர்சேய் தன்னை
தெத்திடுவானுங்கண்ட சேதியைச் செப்பலாமே. 57

லக்கினாதிபனுமைந்து நாதனு மெட்டாறில்
தங்கவர் தன்னிற்சாரத் தருசுப ருடனேயல்லால்
மிக்கதாய் சுபரேபார்க்க விளங்கிய சாதகர்க்கு
மக்களாந் தத்துப்புத்திரன் வந்திடு மனையில்தானே. 58

சொல்லிய வைந்தாம்தானம் புதனுடை வீடாய்தோன்ற
அல்லது மந்தன்வீடா யமர்ந்திடத் தானமீதில்
வல்சனி குளிகன்கூடி வாழ்ந்திடப் பார்த்துநிற்கச்
செல்வமாய் வாழ்வானாலும் புதல்வரில் தத்துக்கொள்வன். 59

புத்திரத்தானநாதன் புகழும்பொட் டித்தராசி
உத்திடவல்லால்நாவி னாறிடமைந்தன் வம்சம்
பெத்திடத் தத்துப்பிள்ளை பேறுவா னென்றுமின்னே
சத்தியமாகச்சொன்ன ஜாதக பாரிசாதம். 60

அஞ்சினுக் குடையோன்மந்தன் அங்கிச மேறிவாழ
மிஞ்சிய வியாழம்வெள்ளி மிகுந்தசொட் சேத்திரமவம்சம்
கொஞ்சிய தத்துப்புத்திரன் கொண்டவன் றனக்குநல்ல
தஞ்சமாப்பிள்ளையுண்டா மஞ்சாத்திரப்படியேதானே. 61

## ரோக பாவகம்.

பேருள சனியுங்கரும நாயகனும் பெலட்டிடற் கருமத்தா
க்கு—மாறினுக்கிறையுஞ்சேயுமே லக்கின னாறுமைசேரய்

வண்மையே செய்யு—மீறிய வாதைத்தானந்தோன் சேய்க்கு
மிகவலியுடையனே யாகிற்—சீறிய நோயால்வாதையே யுண்டாந்
தீட்டிய திலதவா ணுதலே. 1

அலவனேயாறின் வியத்தினிலெட்டிற் பில்லிருளியவாதம்
பலனுறுமுதயந் தன்னிலேநிற்கிற் பாண்டுநோய் சிறணம்பிளவை
யுலவிய பலப்பேய்ப் பாவியைக்கூடி யொன்றெட்டி லுயர்திரி
கோணத்தில் முறிற்கண்ணோய் மிகுசயரோகந்தன்னி லிறப்பது
சனியே. 2

முன்னமேசொன்ன தலத்துறுமதியை முற்றிய சுபரோதிர்பார்க்கி
வின்னல்கூர்நோயா ளுட்சென்றுமாய்வ ரிரண்டொடு மூன்று
பன்னொன்று—தன்னிலே மதியமுறச் சுபர்கூடி யற்சரீரத்தின்
வந்தநோயெல்லாம் பன்னியபொன்னைக் சுடக்குளிர்ந்தாற்போற்
பகருநோய் சீக்கிரந்தெளியும். 3

மேவுறு பகையும்விடம் பித்தரோகம் வேந்தர்கள்கோபமே
செய்யுந்—தாவுறுகதிருக்கிவ்வகை சேய்க்குச் சாற்றிய சன்னி
பன்னிரண்டு—வேவுறு கண்ணோய் சிலேஷ்மமுண்டா மினிய
தோர் புந்திக்குப்பிரமை—கூவுறு குன்மமிகுபிரமேகங் கொடுந்
துக்கஞ் சோபமுமுண்டே. 4

பவுந்திரம் வாக்குக்கேடுமல்லாற் பாணியத்தினிலாசை—
தவத்தினைக் கெடுக்குந்தேவ சாபத்தைத்தந்திடும் பொன்னவர்க்
கென்பா—ரவப்பிரமேக மூலங்கண்ணோயுமதி சாருஞ்சிலேற்று
மலாதந்துவக்ரா செய்யும் வெள்ளிக்கென்றுரைத்தார் சொற்
பதற்கிணைந்தமேலவரே. 5

பேயினால்வாதைப் பேசுவெள்ளிக்கும் பெட்புறு சனிக்குமே
பேதாய்—நோயுறு காலைமுடக்க மூட்டாச்சனையதோ ருத
ரத்தில் வாதை—மாயறும்பாவர் மனைவிமைந்தருக்கும் வன்றுயர்
போதுமுண்டாக்கும்—காயுறு சர்ப்பவேதையாங் கேதுகறுவிழற்
கிரந்திகுன்மமுமே. 6

குளிகன்றன் வாரிதியன்னத்தை மருந்தலைத் திருமா கண்டனு
மாயில்—சனியொருமவனே யேழினிற்கிற கலங்குவர் பிரமை
யினாலே—யொளிதிகழ்வெள்ளி குருவுமே குளிகனுடனுற்றே
யேழினிலிருக்கிற் றெளிவிலாதுமன்று பிரமையால் மாய்வன்றி
லதவாறு தலவாக்கறசே. 7

வான்கதிர்சிவனால் வாதையாமதிக்கே வன்றுர்க்கை தர்மதேவ
தையாற்—றன்கடுவாதை குசன்சனிதனக்கே சண்முகனாற்பிணி
புதற்கே—தின்காந்தருவர்வாதை நோன்பினர் தன்றெய்வ சாபத்
தினின்வாதை—மீன்குறிவெள்ளி குருவுக்கேயாக்கர் வேதை
காரிக்குக் கண்ணேயே. 8

உதயமாறெட்டமாரினிற் குளிகனுடேதி யிருந்திடின்வாத்தின்
புதையுறுவாதஞ் சீதளக்காச்சல் புகலதிசாரவாந்தியுமா
மதிமயக்குண்டாய் மாறுவர்மதிலை யக்கிரன்சூரியன் கூடிற்
சதிசெய்காட்டேரி கன்னிமாரிருடித்தன் குறைகோவெனச்
சாற்றே. 9

ஆறுளோன்பிலக்கின் மந்திரார்ச்சனையா லாறிடுநோய்களேயென்
பார்—தேறுமோரெட்டோன் பெலத்திடிற்றனே தேகசமென்
னவேவேண்டு—கூறியவாதைத்தான னெழிற்கு கு று கி டக்
கொடுக்கப்பத்தாகிற்—சேரொருடுகழிக்க லாமென்றோர்மற்றுற்
றுலைந்திடும் வாதைகளெல்லாம். 10

ஆரிற்பாவருடன் மதியுற்றாலும் பாவரிருந்தாலும்
வீறுமாறுக்குடையவன் பால்வெய்யச் சனிதான்கூடினுங்
கூறுமுதயமாறெட்டிற் குறிக்கும்புதன்றா னின்றிடினு
மேறுகாலாறினிற் சனியனுறினும் வாதவாயுவென்பார். 11

குருவுமூன்றுக் குடையவனைக் கூடிப்பெலமே குறைந்தாலு
மருவுமுதயந்தனிற் செவ்வாய் மந்தனிரவியிருந்தாலு
மருஞ்முதயங் குசனிருக்கவழிக்கண் சனியன்பார்த்தாலும்
பொருவிப்புருதிக் கூட்டமெனப் புகல்வர்சுகராஞ்சிதமயிலே. 12

வெய்யசனி சேயாதினிற்க விளங்குமிராசி ரவிபார்க்கத்
துய்யசாமி துர்ப்பலமாய்த் தோன்றினு மிலக்கினத்தி
னையுமுடைய னிருக்கவொரு நாலுமூன்றிற் புதன்மேலே
யுய்யுங்கொறீதே னினிற்செவ்வா யுற்றூற்றீர்க்கரோகியென்பார். 13

எட்டுமராகுக் கிறைபானி யுடனேகூடி யுதயமதி
யெட்டின்மேவி யிருந்தாலுமேழி லாவிற்சனியுறினுந்
தொட்டவுதயங் குடும்பத்திற்சொல்லு மிராகுவிருந்தாலும்
கட்டிமுதயந்தனிற் குளிகன்கலந்தே யுறினும் ரோகியென்பர். 14

மிகுலக்கினத்தி லிரவிசெவ்வாய் வெள்ளிகூடியிருந்தாலுந்
திகழுமுதயந்தனிற் சனியன்செவ்வா யிரவிகூடினு
மிகர்பொன் மதிசேய்கூடினு நிறவுமால் சேய்கதிருடனும்
மகிழ்பொன்சனிமால் சேயுதயமவந்துகூடில் ரோகியென்பார். 15

உதயலக்கனத்திற் பாவருகந்து தானிருக்கப்பார்க்கச்
சிதைவிலா விவாகடங் கடிசையபகாரத்துள்ளு
மிதயமார் சாமிக்கே தானெட்டி யன்னிமண்டிலாறிற்
புதைவுற்றோர் திசைபொசிப்பிற் பொருந்திடுரோகமென்பார். 16

பனிமதி புகர்பொன்றன்னை மன்னிய காமத்தோனைச்
சனிசெவ்வாய் இருகுமாந்தி தான்கூடப் பார்க்கவேதான்
கனிவுறு பஞ்சவர்க்கங் கடினமாய் விரணமாகித்
தொனிபெறு ரோகமுள்ள துடையனென் றுகூறே. 17

இல்லற மொன்றேடேழுக் கிறைவ னொன்றாய்க்கூடி
வல்லது முந்துமங்க மாகியே யொன்றாய்க்கூடிற்
செல்லுறு மாதித்தலத்திற் செங்கைதட்டத்திரோகைக்
கல்லென பரிமாரீசக் காரிகைக் கலந்துவாழ்வன். 18

வக்கிர மாகக்காரி மதிதோள தெட்டாய்நிற்க
வுக்கிரச் செவ்வாய்பார்க்க வுடன்கூட விரண்டாமண்டிற்
புக்கிடு மதலைசாவாம் புதனுந்தேய் மதிசேர்ந்திருக்க
வக்கிர சனிசேய்பார்க்கில் அரிட்டம்மொண் டாண்டிலென்பர். 19

எள்ளிய செவ்வாய்க்கெட்டா மிராசியில் பொழனிற்க
வெள்ளி பாரு திருக்க மிருபாவர் மதியைப்பார்க்கில்
வள்ளிய மதலைநோயால் மாண்டிடு மென்றுமாண்டிற்
றெள்ளிய கணிதநூலோர் தெரிந்துரை செய்தவாறே. 20

எட்டினி லுதையந்தன்னி லிரவியு மிருக்கநோக்க
மொட்டென வுதையோன்கூடிற் பொல்லாத பித்தரோகம்
கட்டிய கச்சிராளை கனல்வண்ண னிருந்திட்டாலும்
விட்டிடா திருக்கும்பித்த ரோகமென் றறிந்துகொள்ளே. 21

சீணமாய் மதியிருக்க சேர்ந்திட பாபந்தானும்
ஈனமாங் கடகந்தேறு மிடாசுர வாகினின்றால்
ஈனமா மீறுமெட்டி லிருக்கிலும் க்ஷயமேயுண்டு
மானமே யுடையமாதே மடிவனே க்ஷயரோகத்தில். 22

லக்கினம் பாபர்நிற்க ரெண்டெட்டில் வெள்ளியாகில்
இக்கண முதயத்தானு மிழிகுலமா யிருக்க
மெய்க்குரு சோமனின்ற விடமதிற் பாபர்நோக்கில்
மிக்கெலுந் தந்திரனே பிரமிய வியாதியுண்டே. 23

எட்டினிற் செவ்வாய்நிற்க வேழினிற் பாபர்நிற்க்
மட்டினி லெண்டிரண்டின் மணியாரக் கேதுநின்றால்
தொட்டிடுந் திலகமாதே தோன்றிய முதலாய்ந்தானே.
விட்டிடா ரெணங்கள்கண்டு வீழ்வனே குதரோகத்தில். 24

செனித்த லக்கினத்திற்பாபர் சேர்ந்துட னிராகுநிற்கக்
குறித்தசா லோனுநீசங் குணாவீன மஸ்தமாகில்
இனிக்கவி சோமன்கூடி யிசலுமே க்ஷீணமாகில்
மனத்தொரு நாளுமில்லா மார்பினில் சூலைகாணும். 25

சங்கவெட் டதனினிற்க சூரியன் கூடசேர
இங்கித மானபூம னிவர்கேழி லுதயமாக
அங்குமோர் சோமனின்ற வன்னிலைபகையுமானால்
இங்கித ராஜனீச மாகிடு விரண்டுமுண்டே. 26

இரவிதன் மதியங்கூடி யிருந்திடப் பனிரெண்டாக
அரவுசே யிரண்டினிற்க வவர்கேழி லரசனாகப்
பகைகேந்திரத்தி லாறோர் பகைநீச மூடமாறாச்
குறைமதி யமிசைநீச மாகிடிற் குருடனாமே. 27

இருமூன்று மிடத்திற்சோம னிரணியன் கூடநிற்க
வருதன மருவீராறில் வந்திட வுதயப்பாம்பு
குருசனி யுடனேகூடிக் கோணத்தின் பின்னேநிற்க
வருமது நேத்திர ஹானி மைவிழி மாதேகேளாய். 28

மூனிலாபத்தின் மன்னர் முன்பினாய்ப் பாபர்நிற்க
வேணுமென் றாநீச மனைமிசை யதுவேயாறாற்
பேணுமோர் மதியுமூன் றும் பிறையுடனீனமாறாற்
காணுமே காணுனங் கண்டிடு மசதியாக. 29

கற்பனை யுதயந்தன்னிற் கண்டிடிற் கேதுவானால்
நிற்பது குளிகன்பத்தேழ் நாலினி னின்றானில்
அர்ப்பருஞ் சுபருமற்றோ றவரையேயுற் றுப்பார்க்கிற்
சொற்பன மனதிற் றெய்வம் போலவே தோன்றுமாதே. 30

என்னுமொன் றினிற்கோளாரு மிடத்துக்கோ ளுடனேகூடி
யுன்னிய ராகுகேது வோடோரு தலத்தேநிற்கத்
தன்னுடல் சுகமில்லாமற் சஞ்சல மனத்தனாகி
பின்னாய் வியாதியத்த னாகியே விளம்பலாமே. 31

காணும் லக்கினக்கோள்பாபக் காரிகளுடனேகூடி
வாறுமெட் டொன்றினிற்றி னலமிலை சரீரமென்க
வீணுறு செவ்வாயோடே மேவுபன் னிரண்டாமெட்டிற்
கோணமா ரேணுஞ்சார்ந்த கொடிய ரோகஸ்தன் கோதாய். 32

தீதுறுஞ்ஜென்மகாலை யெட்டிற்செங் கதிர்நிற்கிலே சுரமாம்
கோதுறு திங்கள்கூட நீர்க்கண்டம் குஜனுறி லாயுதபீடை
சோதிசேர் புந்திவியாதி பொன்மிருத்திசுக்கிரன் தரித்திரமாகும்
வோதிய சனிதாயதனக்குமே தோஷமொருவருமிருக்க வொண்
ணாதே. 33

அஞ்சினுக் குடையோனேடு வட்டமா திபனுஞ்சேர
விஞ்சையா யுயிர்ப்பாவர் விளங்கிட யிருப்பதானல்
தஞ்சமாய் முப்பத்தொன்றில் சார்ந்திடும் விஷத்தாற்றத்து
மிஞ்சபோ லொழியலாகு மன்னவன் பெலமாய் வாழ்வன். 31

## களத்திரபாவம்.

மணந்தரும லக்கினத்தே னிரண்டினே னேழில்மன்னேன்
உணர்ந்திடிற் பன்னிரண்டோ னதிலுறை கோட்கள் அங்கண்
துணைந்திடா திவர்கள்புத்தி திசைதனின் மணத்தைச்செய்யும்
குணைக்குரி பலங்கொண்டோது குருகடாக்ஷத்தினுலே. 1

சந்திரன் றனக்கோன் றஞ்சதானமும்
விந்தையாக விரையமு மேழினும்
வந்துதெய்வத மந்திரி சாறுப்போ
தந்தநாளினி லாகும் விவாகமே. 2

ஏழினில் மாலாயிருந்திட வேழில்விரவிபொன் மிருகுடன்கூடி
தாழ்விலாய்புகரும் நீசனுய்த்தோன்றி சந்திரன்றனக்குமே யிறை
யில்—னன்விணைப்படியே மனைவியெண்டாக வமைந்தனர் பிறந்
திடும் சேய்க்கு—ஏழிலிருந்த குருதிசைதனிலேழி லுறுமனைவி
வந்திடுமே 3

ஏழினில் மந்தனிருந்திடவக் கோளிந்து வீடதனிலேனும்
தாழ்விலாக்கேதுவுங்கூடியேபுகர்க்குத்தரித்திட கருமகேந்திரமாய்
கோன்புகருயிரினுக்கே உயிர்க்குமுறிடக் குறுகியேபாற்க
வாழ்வெதுமல்கை இரண்டெனவதுக்க மறைபவர் நாவிருல்
மொழிந்தார் 4

வேறு

காரியு மேயிருக்கேழில கலந்திட — புகர்வீடாகி
நேரியே யிருக்கவுச்ச மிருபல மாகியன்றேன்
பாரினி லுயிர்க்குமுன் றிற் பதிந்திட யாக்கைமேற்றால்
காரிபோல் திறமாய்தாரம் கருதின ரிரண்டென்றேதே 5

### வேறு

பத்தினிஸ்மரந்தி பதிந்திடவன்றேன் பருதிக்குமூன்றினில்மறை யில்—சித்தியாயன்றேன் கேதுடன்றேன்றிச் செனித்திடப் பிறந்த சாதகர்க்கு—புத்திரர்தெத்தரம புகழ்ந்திடவல்லன் புனி தமா மனைவியிரண்டாம்—சத்தியமாகக் கணிதநூல் சாற்றினார் கரும தோஷத்தால். 6

### வேறு

எழிறேன்புகரா யிருந்திடமதிவீ டிணங்கியே உயிர்க்குவோன் பதனில்—தாழ்விலா விரண்டோன்தனித்திட விரண்டில்சந்திரன் றனக்குமே மறையில்—கோள்புகர்க்கிரண்டில் அரவுடன் பருதி குருவிடக்குருவுமே நோக்க—வாள்வெனு மாவின்றிசை மதி பூணில் மனைவியர் தோன்றிடவருமால். 7

### போகி

பாகன்வீ டேழோனைப் பதிந்திட லதற்குநாதன்
ஆகவா கனனுங்கார கனுமொன்றாய்க் கேந்திரிக்கிற்
போகமே அதிகம்செய்வன் புகர்திசை மாலுரன்தாரம்
யோகமாய் வருகுமென்றே யுரைத்தனர் தமிழ்வல்லோரே. 8

### இரண்டுதாரம்.

எழிறேன் பருதிகேது இணங்கியே உயிர்க்குலாபம்
தாழ்விலாப் புகர்பொன்றேடு சந்திரன் றனக்குமேலாய்
கோளெனு முயிரோன்செவ்வாய் குறுகிடப் புகரைநோக்கி
ஊள்வினைப் படியால்தார முறைத்திடி விரண்டென்றே. 9

### களத்திர தோஷம்.

எழிறேன் கரியோன்புகருடன் மாலுமிருந்திடச்சந்திரன்வீடால் தாழ்விலா குடும்பந்தன்னிலே அரவுதரித்திட கேதுவும்பார்க்கில் கோளெனுமுயிரோன் உயிரினிற் குருக்கோதையர் மாய்ந்திடும் பலனை—ஊள்வினைப்படியே கேநாள்புகரி லுரைத்தனர் மனைவி யர் போமே. 10

### இரண்டு தாரம்.

போகத்தா னதனேசனுமேறன் பொன்னவன் றன்னைக்கூடி
வேகத்தோ டேழிற்றானே விளங்கிட மதிக்கஞ்சாக
ராகத்தோ டியிரேறனாரில் தனித்திடச் சனியேபார்க்கில்
ாகத்தால் மனைவிரெண்டாய்ப் பலித்திடு முறுதியென்றார். 11

### வேறு

ழி னுக்குடையோ னேன்பா னிருந்திட வத்தானத்தோ
ாழிட மால்வீடாகி மறைந்திட வெட்டோன்பார்க்கில்
தாழ்விதிப் படியாற்றாம் சொல்லலா மிரண்டேயாகும்
ாழ்வது வரமேபாகத்தால் மாய்ந்திடும் பிலமொன்றுமே. 12

### மூன்று தாரம்.

ழின்கோள் செவ்வாயரவுடன் மறைந்தேயிருந்திடச் சொந்தவீ
_தனில்—தாழ்விலாதுயிரிற் சந்திரன்மாந்தி தரித்திடப் புகரு
_ன்குருவும்—வாழ்வுமால் வீட்டில் மதிக்கிரண்டாக வந்திடச்
சேயையு மொன்பான்—ஆளவேநோக்கில் மனைவி மூன்றாகும்
அரிவைய ரனேகமாம்போகம். 13

### இரண்டுதாரம்.

திலையிலே முடையோன்மாறும் நின்றிடப் புகர்வீடேக
மலைவிலா வாக்கோனேழில் வந்திட மாந்திபாற்க
சிலையு றும் பாவர்செவ்வாய் சேர்ந்திட மதிக்கேழாகில்
குலையு றுங் களத்திரங்கள் குறித்தன ரிரண்டாய்ச்சேரும். 14

### ஒருதாரம் தாரவாழ்வு.

அஞ்சினுக் குடையோன்றானும் மஞ்சமீ ரஞ்சிற்றேன்ற
வஞ்சிய ரில்லம்தன்னில் மதியுமே தனிக்கவக்கோள்
குஞ்சரத் துடனே புந்தி குருவுடன் சேர்வதாக
வஞ்சிய ரொன்றேயாகும் வரவர வதிகவாழ்வாம். 15

### வேறு

ஏழினுக் குடையோனஞ்சி லிருந்திட வதற்குநாதன்
வாழ்வுட னுச்சமாட்சி மறைவிலா திருப்பானாகில்

ஆழ்விதிப் படியேதாரந் துணிவுட னேகமாகும்
தாழ்வுட னக்கோள்தானும் சட்டாட்டம் பகைநீசத்தால். 16

## தாரதோஷம்.

புகருடன் தீக்கோள்மேவ பொருந்தவேடழித்தோன் றன்னை
பகர் சனி பார்வையாகப் பாவக்கோள் முன்பின்நின்றால்
சுகர்மொழி மனைவிரெண்டைத் துணிவுடன் அலைப்பானென்றும்
புகருடன் அபர்கள்சேர்ந்தால் பொருந்திடும்தொத்தோன்றுதே.

## ஒரே தாரம்.

சூரியனே ழேழனுகித் தோன்றிடமால் வீடக
சீருமக் கோளொன்றுனும் சசியொடு மறைவதாக
கூருயிர் தனக்கோரேழில் கோள்பரி புகர்வந்துற்றால்
சீருடன் நாலோன்வந்தால் சேர்ந்திடும் தாரமொன்றே. 18

## வேறு

மந்தனும் கேதுமேழில் வந்திட வதற்குநாதன்
விந்தையா யருணன்வீட்டில் விளங்கிடப் பாம்போடுற்றால்
தந்திடு மிரண்டோன்சுங்கன் சாரிடம் சசிவீடானால்
வந்திடு மனைவிரெண்டில் மாய்ந்திடு மொன்றேயாகும். 19

## வேறு

மதிமக னேழுசுங்கன் மந்தன்வீடதனிற் சேர
சதியுட னக்கோள்தானும் தனித்திட அட்டமத்தில்
விதியுடன் பூமன்றானும் விளங்கியே ழிடத்தில்சேர்ந்த
பதிதனி லுதிக்குஞ்சேய்க்குப் பகரலாமனைவி யேகம 20

## வெகுதாரம்.

எழிலுக் குடையோரெட்டி லிருந்திட நீசமாக
வாழவே புகர்சேப்பாம்பு வந்திட வதனிலாக
தாழ்வுட னுதிக்குஞ்சேய்க்குத் தாரம்வந்துற்றதெல்லாம்
உள்விதிப் படியால்தாச முறைத்தனர் கெணிதநூலோர். 21

நான்குதாரம்.

அஞ்சிலே யெட்டில்திக்கோ ளமர்ந்திடச் சுபர்களோடு
விஞ்சையாய்ப் புகர்மால்சேய் விளங்கிடும் சாதகர்க்கு
வஞ்சியர் நாலேயாகும் வந்திடும் நாசமூன்று
மிஞ்சவே ஒன்றுவாழும் விதித்தன னிறைவனந்தால். 22

இரண்டுதாரம்.

ஏழினுக் குடையோனேழி லிருந்திட மால்பாரோடு
தாழ்வுட னுயிர்க்கிரண்டில் சனிதனித் திடுமேயானல்
வாழ்வுடன் பிறக்குஞ்சேய்க்கு வந்திடு மிரண்டுதாரம்
ஏழினோன் றிசையில்சேரும் மியல்புட னாசமாதே. 23

வேறு

மாதவர் மொழியென்றே தேவந்திடும் சாதகர்க்கு
வேதமா யிருபத்தாரில் விதித்தனர் மனைவிநாசம்
நீதமா யொன்றுவாழும் நிகழ்வய திருப்பத்தெட்டுள்
ஓதிடு மனைவிவெய்யோன் ஒளிர்மதி நிறமென்றோதே. 24

வேறு

ஏழினுக்குடையோன் காரியோடேகி யிருந்திட வுதையகேந்தி
ரத்தில்— தாள்வுடன்தனில் மாந்தியும்வருக சற்குருவெட்டினிற்
றரித்தால் — வாழ்வுடன்பிறக்கும் சேயவன்றனக்கு வருத்தனர்
மங்கையரிருவர்—சூழ்விதிப்படியா லொன்றுமாய்ந் திடுமாம்
தொகுத்தனர் சாதகன்றனக்கே. 25

களத்திரத்தா லின்பதுன்பம்.

ஏழினுக் குடையோனாட்சி யிருந்திட அரவம்சேர்தால்
பாழ்பட ஒழியும்செல்வம் பகரலா மனைவியாலே
தாழ்விலா தனவானவன் சாற்றினர் முப்பத்தேழில்
ஊள்விதிப் படியேதார முணர்ந்திதை யுலாத்தார்மேலோர். 26

வேறு

ஏழினுக்குடையோன் பருதிமாலுடனே யிருந்திடமறைந்தே
மாகில்—தாழ்வுடனேழில் வெள்ளிவந்தேகித் தனித்திட முன்
பினும் பவராய்—வாழ்வுடனுயிருக் கிரண்டினிற்கருங் கோள்
வந்திடவெட்டின்கோளேழிற்—சூழுறப்பிறந்த சாதகன்றனக்கு
சுகமிலாத் தாரம்வந்தொழியும். 27

வேறு

ஏழினுக்குடையோன் புகராய்த்தோன்றி யிரவிமால் கேதுட
னிருக்க—தாழ்வுடன்வெள்ளி நீசவீடதனிற் றனித்திடப்பிறந்த
சாதகர்க்கே—வாழ்வினைப்படியே வயதுமே யிருபத்தொன்றினில்
தாரம்வந்ததுவும்—சூழுறவிதியா லன்னியந்தன்னில் சுந்தர
மனைவி வந்திடுமே. 28

ஓரேதாரம்

ஏழினுக்குடையோன் புகருடன்கூடி யிருந்திட வளருகேந்திர
மாய்—சூழுறவிதியா லிரண்டஞ்சேழதனிற் றோன்றிடப் பாவர்
வார்திடுமால்—வாழ்வுடன்மாலோன் றிசைகளில்மறையோன் வந்
திடு முனினிற்றாரம்—வாழ்வினைப்படியே யேகமாமனைவி புனைந்
தனர் சாதகன்றனக்கே. 29

இரண்டுதாரம்.

ஏழினுக்குடையோ னேழில்லிருந்திடப் பவர்வீடாக
வாழ்வுடன் புகர்மால்கேது வருமிட மறையதாகில்
தாழ்வுட னாகிசுதும் சேய்க்குத் தாரமுமிரண்டேயாகும்
வாழ்விதிப்படியேயாக புனைந்தனர் சாதகர்க்கே. 30

வேறு.

ஏழினோன் மால்வீட்டி லிருந்திடப் புகர்பாம்போடு
தாழ்வுட னிரண்டேழஞ்சில் தனித்திடப் பாவர்வந்தால்
வாழ்வுடன் தோன்றும் சேய்க்கு வகுத்தனர் மனைவிரண்டாம்
வாழ்விதி யிதுவேயென்று முறைத்தனர் சாதகர்க்கே. 31

6910

வேறு.

ஏழினுக்குடையோன் காரிபாம்போடே இருந்திட வுதயசேந்தி
ரத்தில்—வாழ்வுடன்பகரும் பரிதியுமாலும் மறைந்திட மந்திரி
விடால்—தாழ்வுட னுதிக்கும் சாதகன்றனக்கு சதிருடன் தார
மிரண்டாம்—வாழ்வி திப்படியே யிருவருமொன்றாய் வந்துவாழ்ந்
திடுவரென் றுரையே. 32

ஏழினுக் குடையோனோடே இரவியும் பாப்புமாக
தான்வுடன் புகர்விடாகித் தரித்திட வக்கோள்தானும்
வாழ்வுட னுயிர்க்கோறில் வந்திடும் சாதகர்க்கு
வாழ்வி திப்படியேதார முறைத்தன் ரிருவர்மாதே 33

ஏழிலோன் புகரோனுகி யிருந்திட வெட்டாறுனல்
வாழ்வுட னிரண்டஞ்சேழில் வந்திடப் பலர்வந்தாற்றல்
சூழுற விதியால்வந்து தோன்றிய சாதகர்க்கு
தான்வுடன் மனைவிமூன்று சார்ந்திடும் தரணிமாதே. 34

ஏழினிற் கரியித்து பரிவுடன்
தாழுவே வரச் சற்குரு சங்கனும்
வாழுவேயூரல் மதிமக னென்றதாய்
சூழுவே ஒன்று தோன்றிடும்தாரமே. 35

இரண்டுதாரம்.

ஏழிலோற்காரிதரித்திடவே ழோனிருந்திட வுச்சமாச்சியினுல்
வாழ்வுடனக்கோனுடன் புகரொன்றாய் வளர்ந்திடச் சுபமிலா
திடில்—சூழுறவி தியாற் பிறந்திடும்சேய்க்கு தோன்றிடும் தார
முமிரண்டாம்—வாழ்வி திப்படியா கிருபத்தேழொன்றில் உதவி
டும் ஒன்றுமாய்ந்திடுமே. 36

ஒருதாரம்

ஏழிலோன் மறைந்தோடொன்ற யிருந்திட மூன்றொட்டில்
தாழ்வுடன் புகர்மால்கேது சாரிடன் கரிவிடேற்றல்
சூழுற விதியால்வந்து தோன்றிடும் சேய்க்குமன்னை
வாழ்வுட னென்றேயாக வகுத்தன ரிருபத்தாறில். 37

### வெகுதாரம் தாரயின்பம்.

குருவுமே சேய்வீடேக கொடியவன் குருவீடேக
பருதிதன் கிரகம்சுத்தம் பாவர்கள் முன்பின்றாக
சுருதியாய்ப் புகரும்சொந்தம் துணிவுடனில்லமானால்
வருநிதி யதிகமாகும் மனைவிய நேகமாமே. 38

### மூன்றுதாரம்.

சந்திரன் புகர்சேயொன்றாய்ச் சாரிட மால்வீடாகி
வந்திட வுயிர்க்கிரண்டாய் வாழ்ந்திட வேறோரெட்டில்
சிந்தையாய்த் தனிக்கும்சேய்க்குச் செப்பினர் மனைவிமூன்றும்
விந்தையாய் வருமென்றோதி விதித்தனர் தானிமாதே. 39

### கனிக்கும்தாரம்துருசம்.

சந்திரனும் புகருடனே வுயிருக்கேழில் தரித்திடவே அதற்
குடையோன் மறைந்தீசம்—வந்திடவே கொடிய பாவருட
னொன்றாக வந்திடும் சேயவன்றனக்கு மனைவிசேரும்—சிந்தை
யுடன் புகர்திசையில் மறையோனில சேருமவ னபகாரமுடிவி
லாகும்—சுந்தரமாய்ப் பாரியவள் தனக்குமுந்தி அற்பிடுமே தப்
பாதே கணிதம்கூறே. 40

### மூன்றுதாரமுந் தோஷம்.

ஏழினுக்குடையோன் புகர்சரிபாம்போ டேகியேமறைந்திடவரு
மால்—வாழ்வுடனேவில் மதிகுருவெய்யோன் வந்திடமுன்புபின்
சுத்தம்—தாழ்வுடனேயொன்றும் சாதகன்றனக்குசாற்றினார்மனைவி
